بسم الله الرحمن الرحيم

அல்கலாம்

AL-KALAM

பத்திராதிபர்:—கூ. அ. அப்துல் மஜீத்.

வால்யூம். 4	1927ஹு ஏப்ரல்மீ	பகுதி. 4

ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து.

இமாமுல் உலமா ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து மௌலானா மஹ்மூதுல் ஹஸன் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் 'ஸஹாரன்பூர்' ஜில்லா, 'தேவ்பந்து' என்னும் கிராமத்தைச் சார்ந்தவர்களென்பதைச் சகலருமறிவர். ஹஜ்ரத் அவர்களின் தந்தை மௌலானா துல்பகார் அலி சாஹிப் என்பவராகும். மௌலானா அவர்கள் அதி கீர்த்தி வாய்ந்த ஆலிமாகவும், நீண்டகாலம் வரை கல்வி இலாக்கா டிப்படி இன்ஸ்பெக்டராகவு மிருந்தார்கள். உத்தியோகக் காரணமாக மௌலானா அவர்கள் 'பரேலி' யில் வாசஞ்செய்து கொண்டிருக்கையில் ஹிஜ்ரீ 1268-ல் ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் ஜனனமானார்கள்.

ஹஜ்ரத் அவர்களின் இளம்பருவமும், கல்விப் பயிற்சியும்.

ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் சிறுவயதாக விருந்தகாலை, சில சந்தர்ப்பங்களில் தேவ்பந்திலும், சில சமயங்களில் தம் தந்தையோடு பரேலியிலும் இருந்து வந்தார்கள். அவ்வமயம் மௌலானா துல்பகார் அலி அவர்கள் பரேலியிலிருந்து மீரட்டுக்கு மாற்றப்பட்

டார்கள். சிப்பாய்கலக நிகழ்ச்சியின் போது ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் எட்டு பிராயமுடையவர்களாக விருந்தார்கள். குர் ஆன் ஷரீபையும், பார்ஸியில் ஆரம்பகிதாபுகளையும், மதப்பற்றுள்ள மஹான் ஹஜ்ரத் மியான்ஜீ மங்களூரி என்னும் ஒரு மஹானிடத்தில் படித்தார்கள். மேலும், ஹஜ்ரத் அவர்கள் தங்களின் சிறிய தந்தையாகிய மௌலவி மஹ்தாப் அலி சாஹிப் அவர்களிடத்தில் அரபி பாஷையின் ஆரம்ப கிரந்தங்களைப் பயின்றார்கள் ஹிஜ்ரீ. 1283-வது வருடம் தேவ்பந்தில் "தாருல் உலூம்" ஆரம்பமாயிற்று. ஹஜ்ரத் மௌலானா முஹம்மது காசிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இக்கலாசாலையை ஏற்படுத்தினார்கள். இதன் பரிபாலனத்தை ஹஜ்ரத் முஹம்மது காசிம் அவர்களே நடத்தி வந்தார்கள். ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் இக்கீர்த்தி வாய்ந்த கலாசாலையின் ஆரம்ப மாணவராகவிருந்தார்கள். ஹஜ்ரத் அவர்கள் ஹஜ்ரத் முஹம்மது காசிம் அவர்களின் சமுகத்திலிருந்து எல்லா இஸ்லாமிய கலைகளையும் கற்று தேர்ச்சி பெற்றார்கள். ஹஜ்ரத் முஹம்மது காசிம் அவர்கள் அந்தரங்கம், பகிரங்கம் ஆகிய இருவித கலைகளைச் சார்ந்த சகலப்பொக்கிஷங்களையும் ஹஜ்ரத் அவர்களுக்கு அளித்தார்கள். ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருந்த போழ்து, இடையிடையே இக்கலாசாலையில் உதவியாசிரியராக விருந்தார்கள். ஆனால், ஹிஜ்ரீ 1292-வது ஆண்டில் தாருல் உலூமின் நான்காவது உஸ்தாதாக முறைப்படி அமர்த்தப் பட்டார்கள்.

தேவ்பந்து தாருல் உலூமின் ஊழியம்.

ஹஜ்ரத் மௌலானா முஹம்மது காசிம் சாஹிப் அவர்கள் ஹிஜ்ரீ 1297-வது வருடம் மரணமடைந்தார்கள். மௌலானா அவர்களின் மரணமானது ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்களுக்கு மிகப் பெருங்கவலையைக் கொடுத்தது. சில காலத்திற்கு பின்னர் ஹஜ்ரத் மௌலானா முஹம்மது யாகூப் சாஹிப் என்னும் மஹானும் இவ்வுலகத்தை விட்டேகினார்கள். ஆகவே, ஹிஜ்ரீ 1305-வது ஆண்டில் ஏகமனதாய் ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் தேவ்பந்து தாருல் உலூமின் (ஸதர் முதர்ரிஸ்) தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார்கள். ஹிஜ்ரீ 1305-வது ஆண்டுமுதல் தொடர்ச்சியாய் 40-ஆண்டுகள் வரை குர்ஆன், ஹதீது ஆகியவைகளைச் சார்ந்த கலைகளின் ஊழியத்தைச் செய்து வந்தார்கள். ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் இஸ்லாமிய கல்வி முழுவதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்களாயினும், ஹதீது ஷரீபைக் கற்றுக் கொடுப்பதில் அதி சிரேஷ்டராக விருந்தார்கள். ஹதீது ஷரீபு ஓதிக்கொடுப்பதில் அவர்கள் நிகரற்ற

வர்களாக விருந்தார்கள். ஆகவே, ஹஜ்ரத் அவர்களிடத்தில் ஹதீது ஷரீபைக் கற்கும் பொருட்டு இஸ்லாமிய உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் தாலிபுல் இல்மு (மாணவர்)கள் வந்துகொண்டிருந் தார்கள். மக்கா, மதீனு, மோசல், பஸரா, புகாரா, ஹிராத், ஸர் ஹத் முதலிய விடங்களிலிருந்து மாணவர்கள் தேவ்பந்துக்கு வந்து, ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்களிடம் கல்வி கற்க முற்பட்டார்கள். உலகில் ஹஜ்ரத் அவர்களின் சிஷ்யர்கள் ஆயிரக் கணக்காக விருந்தார் கள். ஹஜ்ரத் அவர்கள் வாலிபதசையில் இரவிலும், பகலிலும் அதிகக் காலத்தை கல்வி கற்றுக் கொடுப்பதிலேயே செலவு செய்து வந் தார்கள். கடைசிகாலத்தில் திருமதீ, புகாரி ஷரீபு ஆகிய பாடங்கள் கற்பிப்பது மட்டும் அவர்கள் பொறுப்பாக விருந்தது.

அந்தரங்க பாக்கியம்.

ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் ஹஜ்ரத் மௌலாஞ ஹாஜீ இம்தாதுல்லாஹ் சாஹிப், ஹஜ்ரத் மௌலாஞ முஹம்மது காஸிம் சாஹிப், ஹஜ்ரத் மௌலாஞ ரஷீத் அஹ்மத் ரஹ்மதுல்லாஹி அலைஹிம் ஆகியமஹான்களின் மூலமாய் அந்தரங்கக் கல்வியிலும் மேம்பாட்டைந்திருந்தார்கள். இம்மூன்று மஹான்களும் உலகத்தை விட்டேகியபின்னர், ஷைகுல் ஹிந்து அவர்களே உலகில் அம்மஹான்களின் ஞாபகச் சின்னமாக விருந்துவந்தார்கள். ஆகவே, எண்ணற்ற முரீதுகளைக்கொண்டிருந்தார்கள். பற்பல தேசங்களிலிருந்தும் அரும்பெரும் உலமாக்களும், புலவாக்களும் ஹஜ்ரத் அவர்களின் சமுகத்தை யடைந்து, அந்தரங்கக்கல்வி, ஆத்மார்த்தீகக் கல்வி ஆகியவைகளைக் கற்று வந்தார்கள். ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் பிக்ஹு, ஹதீது ஆகியவைகளில் முஜத்திதாகவும், தப்ஸீர், இல்முல் கலாம், ஆகியவைகளில் இமாமாகவும் இருந்தார்கள். ஆனல், ஹஜ்ரத் அவர்கள் தங்கள் நாமத்தைஎவ்வமயத்திலும் உலமாக்களின் எண்ணிக்கையிற்சேரவிடவில்லை. ஹஜ்ரத் அவர்கள் தன்னடக்கத்தோடு,சாதாரணமாய் காலங் கழித்து வந்தார்கள். ஹஜ்ரத் அவர்கள் பெற்றிருந்த பெருமை, அந்தஸ்து ஆகியவைகளைத் தெரிந்து கொள்ளும் உண்மையாளருங்கூட, ஹஜ்ரத் அவர்களின் சகிப்புத்தன்மையைக் கண்ணுற்று பிரமித்துக் கொண்டிருந்தார்கள். பற்பல வகையினர் ஹஜ்ரத் அவர்களின் சமுகத்தை யடைந்து கொண்டிருந்தார்கள். தோற்றத்தில் ஷரீஅத்திற்கு மாற்றமாக விருப்பவரும் சிலசமயங்களில்ஹஜ்ரத்அவர்களிடம்வருவதுண்டு. இத்தகையோர் வருவதை முன்னிட்டு அருவருப்புக் கொள்ளுவதில்லை. ஹஜ்ரத் அவர்களின் இப்பெருந் தன்மையை சிற்சில குறுகிய மனத்தையுடையோர்ஹஜ்ரத்அவர்களைக் குறைகூறபின் வாங்கவில்லை.

இஸ்லாமிய உணர்ச்சி

ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்களின் தைரியமானது கல்வி கற்பிப்பது, ஜனங்களைச் சீர்திருத்துவது ஆகிய சாதாரண காரியங்களை மட்டும் செய்து திருப்தி யடையக் கூடியபதாக வில்லை. மேலும், ஷைக் அவர்களின் உறுதி அதிவிசால நோக்கத்தைக் கொண்டிருந்தது. இஸ்லாமிபபற்று, பொதுஜன சேவை, சமூகாபிமானம் முதலிய உணர்ச்சி அவர்களின் ஹிர்தயத்துள் நிறம்பிக் கிடந்தன. ஆதலின், ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் செல்லவேண்டியதாக விருந்த வழிபெரும் கஷ்ட நிஷ்டூரங்களை யுடையதாகவிருந்தது. எத்தகைய துன்பங்களையும் ஆண் சிங்கத்தைப்போல் நின்று ஏற்றுக்கொண்டார்கள். ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்களுக்கு நிகழ்ந்த சங்கடங்களை யொட்டி எவரிடமும் சிறிதளவும் முறையிட்டுக் கொண்டதில்லை. ஹஜ்ரத் அவர்கள் இவ்வபாயகரமான வழி சென்று கொண்டிருந்த போழ்து, கௌரவம், தேகசுகம், நண்பர், உறவினரின் கவலை, பொருளாசை முதலிய எதுவும் குறுக்கிட்டு ஹஜ்ரத் அவர்களை வழி மறிக்கக் கூடவில்லை.

திருப்போலி, பால்கன்ஸ் யுத்தங்கள் நடைபெற்றபோழ்து ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் அடக்கமற்று அளவற்ற கவலையிற் சிக்குண்டார்கள். ஹஜ்ரத் அவர்களின் உஸ்தாதும், பீருமாகிய ஹஜ்ரத் மௌலானா முஹம்மது காசிம் சாஹிப் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இஸ்லாமுக்கு ஆபத்தான காலத்தின்போழ்து மதரஸாவை அடைத்து விடுவதுபோன்று ஹஜ்ரத் அவர்களும் திருப்போலி, பால்கன்ஸ் யுத்தங்கள் நடைபெற்றபோழ்து மதரஸாவை அடைத்து விட்டார்கள். மதரஸாவின் துலபாக்(மாணவர்)களைப் பல விடங்களுக்கு அனுப்பி, முஸ்லிம்களுக்கு உதவிபுரியும் பொருட்டு நிதியைத் திரட்டினார்கள். துருக்கியருக்குதவி புரிவது கடமையென்பதற்குரிய மார்க்காதாரங்களை யெடுத்துக்காட்டி, பத்வாவைப் பிரசுரித்தார்கள். ஆங்காங்கு சென்று பிரசங்களும் செய்தார்கள். இவை யாவும் ஹஜ்ரத் மௌலானா முஹம்மது காசிம் சாஹிப் ரஹமதுல்லாஹி அலைஹி அவர்கள் இஸ்லாமுக்கு ஆபத்தான காலங்களில் வழக்கமாய்ச் செய்து வந்த காரியங்களே. ஆனால், திருப்போலி, பால்கன்ஸ் யுத்தங்களின் போழ்து ராஜீய துறையில் ஏறிட்டுப் பார்ப்பதும் குற்றமெனக் கருதம்பட்டது. சுயேச்சையின் சொர்ப்பனங்கூட மனத்துள் திகிலையுண்டுபண்ணக் கூடியதாகவிருந்தது. 1857-வது வருடம் நிகழ்ந்த சிப்பாய் கலகத்திற்குப் பின்னர் இந்தியாவின் எல்லாப் பாகங்களிலுமிருந்த ஹிர்தயங்களை அரசாங்கத்திற்குத் தலைவணங்கும்படி அதி

காரவர்க்கம் செய்துவிட்டது. ஆனால், தேவ்பந்து என்னும் பூமியி லிருந்துமட்டும் சத்ரா ஜிஹாதின் வாடை அரசாங்கத்திற்கு வீசிக் கொண்டிருந்தது. ஆதலின், தேவ்பந்தின் தாருல் உலூமென்னும் கலாசாலை அதியபாயகரமான இல்லமென்று கருதப்பட்டு வந்தது. எனி னும், இத்தகைய சோதனைக்குரிய காலத்தில் இந்திய முஸ்லிம்களின் வருங்கால க்ஷேமத்தையொட்டிய காரியத்திற்கு ஹஜ்ரத் அவர்கள் அஸ்திவாரக் கல்லைநாட்டினார்கள். உண்மையில் அஸ்திவாரக் கல் நாட்டுவது கஷ்டமென்பதும், கட்டடம் கட்டுவது இலகுவென்பதும் வெளிப்படை.

மகாயுத்தமும், ஹஜ்ரத் அவர்களின் ஹிஜாஸுப் பிரயாணமும்.

மகாயுத்த ஆரம்ப காலத்தில் மௌலானா அப்துல் ஹக் சாஹிப் ஹக்கானி என்பவர் அரசாங்கத்தின் தூண்டுகோலுக்குட் பட்டு, கிலாபத் பதவிக்குத் துருக்கியர் அருகதையற்றுவிட்டனரென்று வரைந்த பத்வாவில் கையெழுத்திடவேண்டுமென்று, இருமுறை ஹஜ் ரத் ஷைகுல் ஹிந்துஅவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். ஆனால், ஹஜ்ரத் அவர்கள் அவ்விருமுறையும் கையெழுத்திட முடியாதென்று மறுத்துவிட்டதோடு, இந்த பத்வாவுக்கு ஆதரவளித்துக் கொண் டிருந்தவர்களை கொடும்பதங்களை யுச்சரித்து, இழித்துக் கூறினார்கள். ஹஜ்ரத்அவர்கள் மீது அரசாங்கத்திற்கு முன்னமேயேபலத்த சந்தேக மிருந்து வந்ததால், ஹஜ்ரத் அவர்களின் மதவைராக்கியமான இந் நட வடிக்கையானது அரசாங்கத்தின் பழைய சந்தேகத்தைப் பலப்படுத்த வாரம்பித்தது. மேலும், ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்களின் எதிரிகள் அரசாங்கத்திற்கு பற்பல தவறானவற்றை எடுத்துக் கூற சமயம் வாய்த்தது. யுத்த சம்பவங்கள் ஹஜ்ரத் அவர்களை ஒவ் வொரு நாளும் வாட்டிக் கொண்டிருந்தன. இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் பெயரால் இந்தியாவிலுள்ள முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்களின் விஷயத்திலும் கவலையேற்பட்டுக் கொண்டிருந்தது. ஹஜ்ரத்அவர்கள் சதா ஹிஜாஸுக்குச் செல்ல வேண்டுமென்னும் ஆவ லுள்ளவர்களாக விருந்தார்கள். ஆதலின், அவ்வமயம் ஹிஜாஸுக்குச் சென்றுவிடுவது உசிதமெனக் கருதினார்கள். ஆகவே, துல்கஃதா மாதம் 7உ சில நண்பர்களோடு பம்பாய் துறைமுகத்தில் கப்பலேறி, ஜித்தாவழியே மக்கமாநகரை யடைந்து ஹஜ்ஜையும் நிறைவேற்றி னார்கள்.

ஷைகுல் ஹிந்து அவர்களின் ஹிஜாஸு வாசமும், ஷரீபுஹுஸைனின் அடாத காரியங்களும்.

ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் தங்களின் நண்பர்களோடு மக்கமா நகரிலிருந்து, மதீனமா நகரையடைந்தார்கள். ஷைக் அவர்களின் வருகையை மதீனமா நகரிலுள்ளோர் வெகுநாளாய் எதிர்பார்துக்கொண்டிருந்தனர். ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்களின் சிஷ்யரும் (கராச்சிகைதியுமான) மௌலானா ஹஜ்ரத் ஹுஸைன் அஹ்மத் அவர்கள் அதி ஆரவாரத்தோடு ஹஜ்ரத் அவர்களை வரவேற்றார்கள். ஹஜ்ரத் அவர்கள் மதீனமா நகரில் 6-மாதங்களைக் கழித்தார்கள். ஷைக் அவர்கள் மௌலானா ஹுஸைன் அஹ்மத் அவர்களின் இல்லத்தில் தங்கியிருந்தார்கள். அவ்வில்லத்திலேயே மதீனமா நகரத்தின் உலமாக்களுக்கும், இதரமாணவர்களுக்கும் ஹதீதுஷரீபைப் போதித்துகொண்டிருந்தார்கள். இதன் மத்தியில் அன்வர் பாஷா அவர்களும், ஜமால் பாஷா அவர்களும் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ரௌலா ஷரீபைத் தரிசிப்பதற்காக மதீனமா நகருக்கு விஜயஞ் செய்தார்கள். அவ்வமயம் ஹஜ்ரத் ஷைக் அவர்கள் மற்ற உலமாக்களைப் போலவே அவ்விரு இஸ்லாமிய வீரர்களைச் சந்தித்தார்கள். மதீனமா நகரில் கலகமேற்படப் போவதாய் வதந்திகள் உலாவிக்கொண்டிருந்தன. மேலும், பாதைகள் அடைபட்டுவிடுமென்றும் கருதப்பட்டது. ஹஜ்ரத் ஷைக் அவர்கள் ஹஜ்ஜைநிறைவேற்றும் பொருட்டு மக்கமா நகருக்குச் சென்றார்கள். கொடும் வெயிலாகவிருந்தபடியால், ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்குரிய காலம் வரும்வரை அஃதாவது நான்கு மாதங்களை தாயிப் ஷரீபில் கழிக்கக் கருதி, தாயிபையடைந்தார்கள்.

ஹஜ்ரத் அவர்கள் தாயிபில் இருக்கும்பொழுது, ஷரீப் ஹுஸைன் துருக்கிய அரசாங்கத்திற்கு விரோதமாய்க் கலகஞ்செய்யவாரம்பித்தார். தாயிப் என்னும் பட்டினம் கடுமையாய் முற்றுகையிடப்பட்டது. ஹஜ்ரத் அவர்களும், அவர்களின் நண்பர்களும் முற்றுகையிடபட்டவர்களிலேயே சார்ந்திருந்தார்கள். தாயிப் பட்டினவாசிகள் தாயிபை விட்டு வெளியிற் செல்ல துருக்கியர்கள் அனுமதியளித்தார்கள். ஆகவே, ஷைக்அவர்களும், அவர்களின் நண்பர்களும் தாயிபைவிட்டு மக்கமா நகரிலேயே வசித்து வந்தார்கள். அவ்வமயம் ஷரீபு ஹுஸைனின் கலகத்தை நியாயமானதென்று நிச்சயித்தும், துருக்கியரை காபரென்றும், பாதகர்களென்றும் தீர்மானித்து வரையப்பட்டிருந்த பத்வாவை (மார்க்கத்தீர்ப்பை) ஹஜ்ரத் ஷைக் அவர்களுக்குக் காட்டினார்கள். அந்த பத்வாவை ஹஜ்ரத்அவர்கள்அதிதைரியத்தோடு "இந்த

பத்வாவை பொப்புக்கொள்ள முடியாதென்று'' கூறி மறுத்துவிட்டார்கள். ஆகவே, ஹஜ்ரத் அவர்கள்மீது ஷரீபு ஹுஸைனுக்கு வருத்தமும், கோபமும் ஏற்பட்டன. மற்றொரு புறத்தில் பிர்டிஷ் அரசாங்கம் ஹஜ்ரத் ஷைக் அவர்களைத் தங்களின் குற்றவாளியெனக் கருதி, அழைத்துக் கொண்டிருந்தது. கடைசியாக ஹஜ்ரத் அவர்கள் அவர்களின்நண்பர்களோடுகைதுசெய்யப்பட்டுமக்கமாநகரிலிருந்து ஜித்தாவுக்கனுப்பப்பட்டு, பிர்டிஷ் அரசாங்கத்திடம் ஒப்புவிக்கப் பட்டார்கள்.

இரகசிய போலீசார் ஹஜ்ரத் ஷைக் அவர்களின் நடமாட்டத்தின் டைரியை இடைவிடாது இந்தியாவுக்கு அனுப்பிக் கொண்டேயிருந்தார்கள். பிர்டிஷ் அரசாங்கம் ஹஜ்ரத் ஷைக் அவர்களையும், அவர்களின் நண்பர்களையும் கைரோவின் சிறைச்சாலையில் மூன்று மாதங்கள் வரை அடைத்து வைத்திருந்தது. கைரோவின் யுத்த காரியாலயத்தில் ஹஜ்ரத் ஷைக் அவர்களிடமும், அவர்களின் நண்பர்களிடமும் வாக்குமூலங்கள் வாங்கப்பட்டன. ஆதார மில்லாததும், தலைகாலற்றதுமான பலகேள்விகள் கேட்கப் பட்டன. ஆனால், அவைகளெல்லாவற்றிற்கும் சாந்தமாயும், பொருமையாயும் ஹஜ்ரத் அவர்கள் விடையளித்தார்கள். பிரிட்டிஷ் உத்தியோகஸ்தரால் கேட்கப் பட்ட கேள்விகள், அவைகளுக்கு ஹஜ்ரத் அவர்கள் அளித்த விடைகள் ஆகியவற்றின் ஒரு பாகம் வருமாறு :—

ஹஜ்ரத் ஷைக் அவர்களைப் பார்த்து,

பிரிடிஷ் அதிகாரி:—தங்களை ''ஷரீப்'' ஏன் கைது செய்தார் ?

ஹஜ்ரத் ஷைக் அவர்கள்:—ஷரீபின் மஹ்ஜரில் நான் கையெழுத்திட மறுத்துவிட்டதற்காக.

பிரிடிஷ் அதிகாரி:—ஷரீபின் மகஜரில் தாங்கள் ஏன் கையெழுத்திடவில்லை ?

ஹஜ்ரத்:—மகஜர் ஷரீஅத்துக்கு விரோதமாகவிருந்தது.

அதிகாரி:—இந்தியாவில் மௌலவி அப்துல் ஹக் ஹக்கானியின் பத்வாவைக் காட்டி, தங்களிடம் கையெழுத்துங் கேட்கப்பட்டதா ?

ஹஜ்ரத்:—ஆம். என்னிடம் கையெழுத்துக் கேட்கப்பட்டதுண்மையே. ஆனால், அதுவும் ஷரீஅத்திற்கு விரோதமானதாகவிருந்தபடியால் கையெழுத்திட மறுத்து விட்டேன்.

அதிகாரி:—மௌலானா உபைதுல்லாவைத் தாங்களறிவீர்களா ?

ஹஜ்ரத் :—ஆம். அறிவேன்.

அதிகாரி:—அவர் எங்கே இருக்கிறார் ?

ஹஜ்ரத்:—அவர் என்னிடம் தேவ்பந்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்.

அதிகாரி:—அவர் இதுபோழ்து எங்கேயிருக்கிறார்?

ஹஜ்ரத்:—ஒன்னரை வருடக் காலமாக நான் ஹிஜாஸிலிருப்பதால் அவரைப்பற்றி எதுவும் கூறமுடியாது.

அதிகாரி:—பட்டுக் கடிதத்தின் உண்மையாது?

ஹஜ்ரத்:—அதைப்பற்றி நான் ஒன்று மறியேன். அக்கடிதத்தை நான் பார்க்கவுமில்லை.

அதிகாரி:—பிரிடிஷாருக்கு விரோதமாக மௌலவி உபைத்துல்லா செய்யும் ராஜீய சதியில் தாங்கள் சைனியங்களின் தளசர்த்தரென்று, மௌலவி சாஹிப் எழுதியிருப்பதைப்பற்றி தாங்கள் கூறுவதென்ன?

ஹஜ்ரத்:—தாங்கள் கூறும்வண்ணம் அவர் எழுதியிருப்பின், அதற்கு அவரே பொருப்பாளியாவார். சைனியத்தின் தளகர்த்தர் பதவி எங்கே? நானெங்கே? தாங்கள் நிலைமையைக் கவனித்துத் தாங்களே நிதானித்துப் பாருங்கள். என் ஆயுள் முழுவதையும் மார்க்கக் காலாசாலையிலேயே கழித்திருக்கின்றேன். யுத்தப் பயிர்ச்சியிலும், சைனியத்தின் கமாண்டர் பதவியிலும் எனக்கென்ன சம்பந்தம்?

அதிகாரி:— தேவ்பந்தில் "ஜமிய்யத்துல் அன்ஸார்" என்னும் சபையை ஏற்படுத்தியதேன்?

ஹஜ்ரத்:— மதரஸாவின் அபிவிர்த்திக்காக.

அதிகாரி:— அச்சபை கலைக்கப் பட்டதேன்?

ஹஜ்ரத்:— ஒற்றுமைக் குறைவினால் சபை கலைந்து போயிற்று.

அதிகாரி:— எத்தகைய ராஜீய நோக்கத்தையும் அச்சபை கொண்டிருக்க வில்லையா?

ஹஜ்ரத்:—இல்லை.

அதிகாரி:—காலிப் பாஷா வரைந்த நிருபத்தின் உண்மையாது?

ஹஜ்ரத்:—காலிப் பாஷாவின் நிருபமென்பதென்ன?

அதிகாரி:—ஹிஜாஸில் துருக்கி கவர்னராக விருந்த காலிப் பாஷாவின் நிருபமொன்றை "முஹம்மது மிய்யான்" என்பவர் ஹிஜாஸிலிருந்து வெளிநாட்டுக்குக் கொண்டு போயிருக்கிறார். அதன் நகலை தாங்கள் காலிப்பாஷா விடமிருந்து பெற்றிருக்கின்றீர்கள்.

ஹஜ்ரத்:—ஹிஜாஸின் கவர்னரான காலிப்பாஷாவுக்கும் என் போன்ற சாமான்னியருக்கும் என்ன சம்பந்தம்? நான் கவர்னரை சந்திப்பதும் சாத்தியமா? தாங்களே யோசித்துப் பாருங்கள். நான் ஒன்றுமறியாதவன். துருக்கிப் பாஷை யெனக்குத் தெரியாது. துருக்கி அதிகாரிகளிடத்தில் எனக்கு எத்தகைய சம்பந்தமுமில்லை. காலிப்

பாஷா ஹிஜாஸின் கவர்னராக விருந்திருப்பினும், அவரை நான் ஹஜ்ஜுக்குமுன் சந்தித்திருக்க முடியாது. பின்னரும் சந்திக்க மார்க்க மில்லை. இது அறிவுக்குப் பொருந்தாத வீண் பழியாகின்றது.

அதிகாரி:—தாங்கள் அன்வர் பாஷா, ஜமால் பாஷா ஆகியவர் களைச் சந்தித்ததுண்டா?

ஹஜ்ரத்:—அவ்விருவரும் ஒரு நாள் மட்டும் மதீனமா நகருக்கு வந்திருந்தார்கள். காலை நேரம் மஸ்ஜிதே நபவியில் அவ்விருவரும் உலமாக்களைக் கூட்டி யிருந்தபோழ்து, (மௌலானா) ஹுஸைன் அஹ்மதும், மற்ற முப்திகளும் அக்கூட்டத்திற்கு எங்களையும் அழைத்துச் சென்றார்கள். மேலும், கூட்டம் முடிந்த பின்னர்அவர்கள் அவ்விரு துருக்கி யதிகாரிகளோடு நான் கைகொடுக் கும்படிச் செய்தார்கள்.

அதிகாரி:—பிறகு அன்வர் பாஷா உங்களுக்கேதேனும் கொடுத் தார்களா?

ஹஜ்ரத்:—ஆம். (மௌலானா) ஹுஸைன் அஹ்மத் அவர்களின் வீட்டிற்கு அன்வர் பாஷாவின் மூலமாய் ஒருவர் எங்களிருவருக் கும் தலா ஐந்துபவுன் வீதம் கொண்டுவந்திருந்தார். எனக்குக் கொடுக்கப்பட்ட ஐந்து பவுனை (மௌலானா) ஹுஸைன் அஹ்மத் அவர்களிடம் கொடுத்து விட்டேன்.

அதிகாரி:—துருக்கி, ஈரான்,ஆப்கான் ஆகிய அரசாங்கங்களுக் குள் தாங்கள் ஒற்றுமையை யுண்டுபண்ண முயற்சித்துக் கொண்டிருப் பதாயும், இம் மூன்று அரசாங்கங்களும் சேர்ந்து இந்தியாவில் இஸ் லாமிய ஆட்சியை ஸ்தாபிக்கவும், இந்தியாவின் மீது படையெடு த்து இந்தியாவிலிருந்து பிர்டிஷாரை வெளியேற்றவும் தாங்கள் உத்தேசித்திருப்பதாயும் இதோ என்முன் னிருக்கும் கடிதங்களில் சிலர் வரைந்திருக்கின்றனர்.

ஹஜ்ரத்:—என் சப்தம் அரசர்கள்வரைப் போய்ச்சேருமென்று தாங்கள் கருதுகிறீர்களா? அங்ஙனமாயின், நான் ஆச்சரியப்படுகி றேன். பல்லாண்டுகளாய் இம்மூன்று ஆட்சிகளுக் கிடையே இருந்து வரும் பகைமையை ஒழிக்க என்னால் சாத்தியப்படுமா? இவர்கள் பகைமையை விட்டொழிந்தாலுங்கூட, இந்தியாவின் எல்லைக்கு சைனி யங்களை யனுப்பு மளவு இவ்வாட்சிகளுக்குப் பலமுண்டா?

அதிகாரி:—தாங்கள் கூறுவதுண்மையே. இக்கடிதங்களில் வரையப்பட்டிருப்பவைகளையே எடுத்துச் சொல்லுகிறேன். அதிருக் கட்டும் ஹுஸைனைப்பற்றி தங்களின் அபிப்பிராயமென்ன?

ஹஜ்ரத்:—அவர் கலகக்காரர்.

மௌலானா அவர்களின் நடமாட்டத்தை இரகசியப் போலீஸா ரால் வரையப்பட்டிருந்த குறிப்பொன்று பிரிட்டிஷ் அதிகாரியிடமிருந் தது. அக்குறிப்பை வைத்துக்கொண்டு, மேற்குறிப்பிட்டுள்ள கேள் விகளைப் போன்ற அநேகக் கேள்விகள் கேட்கப்பட்டன. ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்களின் நண்பர்களிடமும் இவ்வாறே வினவப் பட்டன. இவ்வெல்லோரும் நிகரற்ற தைரியத்தோடும், சுயேச்சை யோடும் பதிலளித்தனர். ஹஜ்ரத் அவர்களும் அவர்களின் நண்பர்க ளும் கைரோவில் மூன்று மாதங்கள் வரையில் பாதுகாவலில் வைக் கப்பட்டு, அதிகாரிகள் பற்பல தொந்தரைகளைப் புரிந்தனர். ஆனால், இஸ்லாமின்மீது அதிவிசுவாசத்தைக் கொண்டிருந்த அப்பெரியாரை சிறிதளவும் அசைக்கமுடியவில்லை.

மால்டாவில் பாதுகாவல்.

மூன்று மாதங்களுக்குப் பின்னர், ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள், அவர்களின் நண்பர்களோடு மால்டாவுக்கு அனுப்பப்பட்டு, அங்கு சிறையில் வைக்கப்பட்டார்கள். இவ்விடத்தில் சில துருக்கி ஆபீஸர்களும், ஜெர்மன் ஆபீஸர்களும் பாதுகாவலில் வைக்கப்பட்டி ருந்தார்கள். இவ்வாபீஸர்கள் ஹஜ்ரத் அவர்களின் விஜயத்தை தங்க ளுக்கு பெரியதொரு பாக்கியமெனக் கருதினார்கள். இவ்வாபீஸர்களிற் சிலர் ஹஜ்ரத் அவர்களிடம் பைஅத்தும் செய்தார்கள். ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் மால்டாவில் சிறைவைக்கப் பட்டிருந்த போழ்துதான் குர்ஆன்ஷரீபை உருதுவில் மொழி பெயர்த்தார்கள் "அபுவாபு வதராஜும் புகாரீ" என்னும் கிரந்தத்திற்கு ஷரஹ் என் னும் விரித்துரை யெழுதினார்கள். ஆனால், இது பூர்த்தியடையாததை முன்னிட்டு வருந்தாதிருக்கமுடியாது. ஹஜ்ரத் அவர்களுக்கு அல்லா ஹுதஆலா போதிய சவுகரியங்களை யளித்திருந்தான். மேலும், ஹஜ் ரத் அவர்கள் மதக்கடமைகளை சுயேச்சையாயும், அதியொழுங்காயும் நிறைவேற்றி வந்தார்கள்.

இந்தியாவிற்கு திரும்பிவருதல்.

ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து அவர்கள் ஹிஜ்ரீ 1338-வது வருடம் விடுதலையடைந்து, ஸ்கந்தரியாவுக்கு வந்தார்கள். அவ்விடமிருந்து சூவேஸ் சென்று கப்பலேறி, அவ்வருடம் ரமலான் மாதம் 17உக்குச் சரியான 1920ஹு ஜூன்மீ 8உ இந்தியாவையடைந்தார்கள். அவர் களைத் தரிசிக்க வேண்டுமென்னும் ஆவல் நிறைந்த ஆயிரக்கணக்கான வர்கள் பம்பாய்க்கு விஜயஞ் செய்திருந்தார்கள். பம்பாயிலிருந்து ஹஜ்ரத் ஷைக் அவர்கள் தேவ்பந்துக்கு வந்தார்கள்; அவ்விடத்திலும் எண்ணற்ற ஜனங்கள் கூடி ஹஜ்ரத் அவர்களைவரவேற்றார்கள். ஹஜ்ரத்

அவர்கள் முதலாவதாக தாருல் உலூமுக்கு விஜயஞ்செய்து, கண்ணீர் சொரித்தவர்களாக ஜனத்திரளோடு அல்லாஹுதஆலாவின் சமுகம் துஆ இரந்தார்கள்.

ஹஜ்ரத் அவர்களை பீடித்த கடைசீ நோய்.

ஹிஜ்ரீ 1339-வது வருடம் ஹஜ்ரத் அவர்களுக்கு வயற்றுக் கடுப்பும், சுரமும் ஏற்பட்டன. இந்நோய் பீடித்திருந்த சந்தர்ப்பத்திலேயே அலிகாரில் "ஜாமிஆ மில்லியா இஸ்லாமியா" விற்கு ஹஜ்ரத் ஷைக் அவர்கள் தங்களின் துப்பரவான கரத்தினால் அஸ்திவாரக்கல் நாட்டினார்கள். சில தினங்களுக்குப்பின் நோய் குணமடைந்துவிட்டது போல் தோன்றிற்று. ஆயினும், சில நாட்களுக்குப்பின் மறுபடியும் நோய் ஆரம்பமாயிற்று. ஆகவே, சிகிச்சையின் பொருட்டு தெஹ்லிக்குச்சென்று, டாக்டர் அன்ஸாரியவர்களின் வீட்டில் தங்கியிருந்தார்கள். அவர்களுக்கு அதிஉயர்தரமான சிகிச்சைகள் செய்யப்பட்டன. (இதேசமயத்தில் ஹஜ்ரத் அவர்கள் "ஜமிய்யத்துல் உலமா" இரண்டாவது மகா நாட்டிற்கு தலைமைவகித்து புரிந்த ஆரம்ப பிரசங்கமும், முடிவுரையும் அதிசிரேஷ்டமான உபதேசங்களாகும். இன்ஷா அல்லாஹ் ஹஜ்ரத்ஷைகுல் ஹிந்து அவர்களின் இக்கடைசீ உபதேசங்களை அல்கலாமில் வெளியிடுவோம்.) பின்னர் நாளுக்குநாள் நோய் விபரீத நிலைமையையடைந்து வந்தது. கடைசியாய் ரபீஉல் அவ்வல் மாதம் 18வ சனிக்கிழமை காலை 8-மணிக்கு மூன்று தடவை அல்லாஹ்! அல்லாஹ்!! வென்று கூறினார்கள். பின்னர் ஹஜ்ரத் ஷைக் அவர்களின் ரூஹ் (ஆத்மா) பிரிந்துபோயிற்று. இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். ஹஜ்ரத் அவர்களின் ஜனாஸாவை தெஹ்லியிலிருந்து தேவ்பந்துக்கு அனுப்பப்பட்டது. மறுநாள் கல்வியின் சூரியனாய் விளங்கிய ஷைகுல் ஹிந்து அவர்கள் மௌலானா முஹம்மது காசிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் மஜாருக்குச் சமீபமாய் அடக்கப்பட்டார்கள்.

ஹஜ்ரத் ஷைக் அவர்கள் தங்களின் ஞாபகச் சின்னமாக ஆண் சந்ததியை விட்டுச் செல்லவில்லை. ஹஜ்ரத் அவர்களுக்கு மூன்று பெண் மக்களும், அப்பெண் மக்களின் சந்ததிகளுமுண்டு. ஆனால், ஹஜ்ரத், ஷைக் அவர்களின் ஆத்மார்த்தீக சந்ததிகள் உலகின் நாலு பக்கங்களிலுமிருந்து வருகின்றனர்.

ஹஜ்ரத் ஷைக் அவர்கள் ஈலாஹுல் அதில்லாஹ் அஹ்ஸனுல் குரா, ஜெஹதுல் முகல், அபுவாப் வ்தராஜும் புகாரி, தர்ஜுமா குர்ஆன் ஷரீபு முதலிய பல் அரிய நூற்களை யியற்றியுள்ளார்கள்,

ஹஜ்ரத் ஷைக் அவர்கள் அரபி, பார்ஸி, உருது ஆகிய இம்மூன்று பாஷைகளிலும் கவிச்சிரேஷ்டராகவுமிருந்தார்கள். கீர்த்திவாய்ந்த கவிச்சிரேஷ்டர்கள் ஹஜ்ரத் அவர்களின் கவிகளைக் கண்ணுறும்போழ் தெல்லாம் அளவற்ற ஆச்சரியத்தை கொள்ளுவார்கள். ஹஜ்ரத் அவர்கள் சிறையிலிருக்கும் போழ்தும் சில கவிகளையியற்றியிருக்கிறார்கள்.

ஹஜ்ரத் மாலிக் தீனூர் ரஹ்மதுல்லாஹி அலைஹி

(121-வது பக்கத் தொடர்ச்சி.)

ஹஜ்ரத் மாலிக்தீனூர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களுடைய இப்பிரசங்கத்தைக் கேட்ட தஹரியா தன்னுடைய தப்பான கொள்கையை விட்டு நீங்கி, நேர்வழியடைய நாடினான். ஆனால், அவனுடைய இருமாப்பும், துஷ்ட சிநேகர்களின் உபதேசமும் நல்வழியடைவதைத் தடுத்துவிட்டன. ஆகவே, தானும் உண்மை வழியிலேயே இருப்பதாய் மொழிந்தான். அதன்பேரில் சபையோர் மாலிக்கும், தஹரியாவும் ஒருவரோடொருவர் கைகோர்த்தவர்களாக நெருப்புக் குண்டத்தில் குதிக்கவேண்டும். யார் உண்மையானவரோ? அவரை நெருப்புத்தீண்டாது எனதீர்மானித்தார்கள். அதையவ்விருவரும் ஒப்புக்கொண்டு, கை கோர்த்தவர்களாய் நெருப்பில் குதித்தார்கள். அவ்விருவரும் யாதொரு தீங்குமன்றி வெளிப்போந்தார்கள். ஆகவே சபையோர் யாதொரு முடிவுக்கும் வரமுடியாதவர்களாகி, சபை கலைவுற்றது.

ஹஜ்ரத் மாலிக் அவர்கள் தங்கள் வீடு சென்று முஸல்லாவிலிருந்து, அல்லாஹுதஆலாவிடம் முனாஜாத்துச் செய்தார்கள் அஃதாவது:—நாயனே! நான் உன்னுடைய ஏக தெய்வீகக் கொள்கையுடன் 70-வருடமாக உன்னை வணங்கி வந்திருக்கிறேன். என்னோடு தர்க்கம் புரிந்தவனோ? உன்னை (அல்லாஹ்வை)யே இல்லை என்று, கூறும் தஹரியாவாகவிருக்க, அவனை என்னோடு நெருப்பை விட்டு காப்பாற்றிய இரகசியம் யாதோ? என மொழிந்தார்கள். அதற்கு "ஓ மாலிக்கே! உம்முடைய கரம் அத்தஹரியாவைப் பிடித்திருந்ததனால், அவன் நெருப்பிலிருந்து காக்கப்பட்டான். இன்றேல் அவன் நெருப்பில் கரிந்துப்போய் இருப்பான்" என யாதும் தோற்ற

மின்றி சத்தம் வந்தது. என ததிக்கிரத்துல் வாஸிலீனில் வருகிறது.

தேண்டிப்பும், பேணுதலும். அன்வாருல் அஜ்கியாவென்ற கிரந்தத்தில் அல்லாமா ஜஅபர் ப்னு ஸுலைமான் திம்ஷகி ரஹ்மதுல்லாஹி அலைஹி வரைந்திருப்பதாவது:—ஹஜ்ரத் மாலிக்தீனர் ரஹ்மதுல்லாஹி அலைஹி. அவர்கள் ஆபிதாகவும், நாயனை வணங்குவதில் மிகச் சிரேஷ்டர்களாகவும், அவனுக்குப் பயப்படுகிறவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் மிகுந்த நேரங்களை "லாயிலாஹ இல்லல்லாஹ்" என்றும், "அஸ்தகபிருல்லாஹ்" என்றும் ஓதிக் கழிப்பார்கள். ஆகவே, ஒருவர் மாலிக்தீனர் அவர்களை நோக்கி, "தாங்கள் உலகசம்பந்தமான வார்த்தையாடுங்கள்" என சொன்னார். அதன்பேரில் ஹஜ்ரத் அவர்கள் "எவன் உலக சம்பந்தமான பேச்சில் வாழ்நாட்களைப் போக்கி வருகிறானோ? அவன் மறுவுலகத்தின் பாக்கியத்தை யிழந்துவிடுவான். ஆகவே, உலகசம்பந்தமான வார்த்தைகளைப் பேசுவதற்கு யோசனை கூறவேண்டாம்" என மொழிந்தார்கள். ஒரு தடவை சில சிஷ்யர்களுடன் ஹஜ்ஜுக்குச் சென்றார்கள். இஹ்ராம்கட்டி, ஹரமில் புகுந்தபோழ்து "அல்லாஹும்ம லப்பைக்" என்று மொழிந்தார்கள். உடனே பிரக்ஞையற்று கீழேவிழுந்து விட்டார்கள். பிரக்ஞையுற்றதன் பின்பு சிஷ்யர்கள் கேட்டதற்கு ஹஜ்ரத் அவர்கள் கண்ணீர் சொரிந்தவர்களாய் நான் எப்போழ்தும் கொண்டிருக்கிற நட்புக்குக் குந்தகம் ஏற்பட்டுவிடுமோ வென்றபயம் என்னை மிகைத்துவிட்டது என மொழிந்தார்கள்.

அப்துல்லாஹ் ப்னுஸாலிம் திம்ஷகி என்ற அவர்களின் சிஷ்யரொருவர் விபரித்திருக்கிறார்கள்:—ஹஜ்ரத் அவர்கள் "இய்யாக நஃபுது,வ இய்யாக நஸ்தயீன்" என்று ஓதும்போழ்து சுற்றுமாறிப் போவதுடன் மிகத்துக்கப்படுவார்கள். அதைப்பற்றி கேட்டதற்கு அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:—மேலே கூறிய ஆயத்திற்கு "நாயனே நாங்கள் உன்னையே வணங்குகிறோம். இன்னும் உன்னிடமே உதவிதேடுகிறோம்" என்றபொருளாகும். ஆனால், நாம் நம்முடைய ஹிர்தயத்திற்கு அடிபணிகிறவர்களாகவும், அதன் உத்திரவிற்குக் கீழ்ப்படிகிறவர்களாகவு மிருக்கிறோம். ஆகவே, ஆயத்தின்படி நான் உண்மையானவனாக விருக்கவில்லையே எனப்பயமுண்டாகிறது" என்று சொன்னார்கள்.

"குணங்கள்" ஹஜ்ரத் மாலிக்தீனர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் மிகசற்குணசாலியாகவும், தாழ்மையுடையவர்களாகவும், கண்ணியத்தைப் பிரியப்படாதவர்களாகவும், நன்றியறிதலுடையவர்

களாகவும் இருந்தார்கள். அவர்கள் தன்னை சங்கையும், மேன்மையுமுடையவராக ஒரு சமயமும் நினைத்ததில்லை. யாதொருவரையும் இழிவாகவும், கண்ணியக்குறைவாகவும் பார்த்ததில்லை. ஒரு சமயம் ஓர் வாலிபர் ஹஜ்ரத் அவர்களை நோக்கி "தாங்கள் மிகமுகஸ்துதியான காரியத்தைச் செய்பவர்கள்" என மொழிந்தார். அதற்கு ஹஜ்ரத் அவர்கள் கோபிக்காமல் "ஒருவேளை தங்களுடைய வார்த்தைமெய்யாக விருக்கப்போதும். ஆகையால், என்னை உண்மையானவனுக ஆக்கிவிடும்படி தாங்கள் அல்லாஹுதஆலா இடத்தில் துஆச் செய்யுங்கள்" என்று சொன்னார்கள். அதைக்கேட்ட வாலிபர் மிக வருத்தமுற்று, தன்குற்றத்தை மன்னிக்கும்படிபாய் கேட்டுக்கொண்டார். அப்படியே ஹஜ்ரத் அவர்கள் அவரின் குற்றத்தை மன்னித்துவிட்டார்கள். ஹிஜ்ரி 127-ஆ ரஜப்மீ 8உயில் விதிப்பயனின் அழைப்பிற்கிணங்கி இவ்வுலகைவிட்டு, விண்ணுலகமடைந்தார்கள். "இன்னுலில்லாஹி வஇன்னுஇலைஹி ராஜிஊன்."

ஆரியமதத்தின் அந்தகாரம்.

(கொளும்பு. எம். ஹேச். மதார்சாஹிப் எழுதியது.)

ஆரிய மதஸ்தாபகரான ரிஷி தயானந்த சரஸ்வதியால் இயற்றப்பட்டுள்ள "சத்தியார்த்தப் பிரகாசம்" என்ற நூலைப்பற்றி தென்னுடு நன்கறியும். அவ்வாபாச நூலில் (எமது தீனுல் இஸ்லாம் உள்பட) உலகத்திலுள்ள சர்வமதங்களையும் மனம்போனபடி தாறு மாருய்த் தூற்றி எழுதியுள்ளார். ஸ்வாமியவர்களால் உண்மையான வேதங்களென ஒப்புக் கொள்ளப்பட்ட நூற்களை ஒருவன் விசுவாசித்து, அதன்படி நடந்தால் அவனுக்கு (முக்தி) ஈடேற்றமுண்டா வென ஆராய்வோம்:—

(1) உண்மை பேசுவதைப்பற்றி "மனுஸ்மிர்தி" கூறுதாவது:— "உண்மை பேசுதல் முதலான கருமங்களை, ஆசாரிப்பதே சுருதிகளால் கோஷிக்கப்படும் ஆசாரம்" (மனு 1:180). அதே "மனுஸ்மிர்தி" மாற்றமாய்க் கூறுவதைப் பாருங்கள். "உண்மை கூறுவதால் ஒருவனுடைய உயிருக்கே அபாயம் நேருமாயின், அந்த சந்தர்ப்பத்தில் உண்மையைவிட பொய் சொல்லுவது உசிதமாகும்

(மனு 8: 103.) "எப்பொழுதும் விரும்பத்தகாத உண்மை பேசாதே. நலத்தைப்பேசுதலே முறையாகும். மனதுக்குப் பிடிக்காத சத்தியத்தை அதாவது குருடனைக் குருடனென்று சொல்லலாகாது. அப்படிச் சொல்வதனால் குருடனுடைய மனம் கஷ்டப்படுகிறதே தவிர லாபமெதுவுமில்லை. ஆகையினால், அத்தகைய சத்தியத்தைப் பேசக்கூடாது." (மனு 4: 138.)

(2) பாப மன்னிப்பு விஷயத்தில், "சத்தியார்த்தப் பிரகாசம்" கூறுவதாவது:—"ஈசுவரன் தனது அடியார்களின் பாவங்களை ஒரு போதும் மன்னிக்கமாட்டார். அவ்வாறு மன்னிப்பாராயின், (அவர் நீதம் செய்தவராகமாட்டார்) எல்லா மனிதர்களும் பெரும்பாவிகளாய் விடுவார்கள். (சத்தியார்த்தப் பிரகாசம், அத். 7. பக்கம் 60.) "யஜுர்வேதம்" இதற்கு மாற்றமாய் கடவுளிடம் பாப மன்னிப்புத் தேடும் பிரார்த்தனைகளைப் போதிப்பதைப் பாருங்கள்:—

"ஓ! அக்கினியே! (அதாவது: ஒளி ரூபியான ஈசுவரனே!) என்பால் உனது கருணையைச் செலுத்துவாய். உனது பேரொளியைத் தந்துஎன்னை பிரகாசிக்கச் செய்வாய். நீ எல்லையற்ற சக்தியுடையாய்! எனக்கு அச்சக்தியைத்தந்தருள்வாய். நீபெரும் வலிமையுடைய தோளினை யுடையாய். எனது பலமற்ற தோளினை உனது பலத்தால் அலங்கரிப்பாய். நீ எல்லாம் வல்ல பரம்பொருள் உனது வல்மையை எனக்களிப்பாய். தூய்மை யற்றதைக் காணுங்கால் கோப வெறிகொள்வாய். எனக்கும் அவ்வெறியைத் தந்திடுவாய். புகழிலும், நிந்தையிலும் நீ கலவாதவன். என்னை அங்ஙனம் இருக்கச் செய்வாய். உன்னை மறப்போரையும், நிந்திப்போரையும் பொருத்தருளும் பெருந்தகையான்நீ! அப்பெருங்குணத்தை யான் பெறும்வழியை எனக்களிப்பாய்." (யஜுர் வேதம், 32: 14; 20: 9.)

(3) மறுமையின் சுகத்திற்காக, ஜீவவதை கூடாதென "மனுஸ்மிர்தி" கூறுவதாவது:—"கரையான் தன்னுடைய புற்றைச் சரிவரக்கட்டிக்கொள்ளுவதுபோல், ஆடவர்களும், பெண்டீர்களும் மறுமையின் சுகத்தை அடைவதற்கு, ஜீவராசிகளொன்றையும் துன்புறுத்தாமல் சரிவர தர்மத்தை அனுசரித்து, விர்த்தி செய்யவேண்டும்." (மனு, 4: 238) அதே "மனுஸ்மிர்தி" மாற்றமாய்க் கூறுவதைப் பாருங்கள்:—"பிரும்மா எல்லா உயிரினங்களையும் பலியிடுகிறதற்காக சிருஷ்டித்திருக்கிறார்................" (மனு 5: 45.)

(4) பொய்சொல்லும் ஓர் பிராமணனுக்கு "மனுஸ்மிர்தியின்" கட்டளை:—"பொய்சொல்லும் பிராமணன் (அசுத்தமான) புழுக்களாய்ப் பிறக்கவேண்டும்," (மனுஸ்மிர்தி. 9: 12) ஆனால், நமது ஆரிய

[library stamp]

மதஸ்தாபகரான ஸ்வாமியாரவர்கள் "தம் தந்தைக்குப் போய் சொல்லி, தமது இல்லத்திலிருந்து மறைந்தோடியதாக" அவரது ஜீவியசரித்திரம் (பக்கம் 11,) கூறுகிறது.

(5) மதுபானமருந்துகிறவர்களுக்கு "மனுவின்" கட்டளை:— "பிராமணனுயிருந்து (மதுபான முதலிய லாகிரி வஸ்துக்களை) உபயோகிப்பானுயின் மரணத்தின் பின் அசுத்தமான வஸ்துக்களை சாப்பிடும் புழுக்களாய்ப் பிறப்பான்' (மனுஸ்மிர்தி, 64: 12) ஆனால், தயானந்தவஸ்வாமியிடம் கஞ்சாக்குடிக்கும் பழக்கம் இருந்ததாக அவரது ஜீவிய சரித்திரம் (பக்கம்; 20) கூறுகிறது.

(6) முனிவர்களின் வேதங்களை ஒப்புக்கொள்ளாதவர்களைப் பற்றி "மனு" கூறுவதாவது:— "வேதம்,வேதானுகூலமாயிருக்கும் முனிவர்களாற் செய்யப்பட்ட நூற்கள். இவைகளை மறுப்போரை நாஸ்திகர்கள் என அறிந்து அப்புறப்படுத்த வேண்டும்; வேததூஷணை செய்கிறவனுகையால், அவனை ஜாதி, சமுகம், தேசம். இவைகளறிந்து நற்குணம் வாய்ந்தவர்கள் விலக்கவேண்டும்." (மனுஸ்மிர்தி, (2 : 11)

இதற்கு மாற்றமாக "ஸ்வாமி தயானந்தர்" கூறுகிறதாவது: "பிறமதத்தவர்களிடம் கொஞ்சங்கூட மரியாதைக் காட்டாதவர்களை ஜீவகாருண்யமற்றவர்க ளென்றே சொல்லவேண்டும்." (சத்தியார்த்தப் பிரகாசம், அத் : 2. பக்கம் 181.) நமது தயானந்த ஸ்வாமியவர்கள்(சத்தியார்த்தப் பிரகாசத்தில்)இவ்வாறு கூறிவிட்டு, அதற்கு மாற்றமாக அவரால் இயற்றப்பட்ட. (Arya Booni) "ஆரிய பூனி" (பக்கம். 17ல்)

"விரோதிகள், எங்கள் மதத்தை ஒப்புக் கொள்ளவேண்டும். அல்லது எங்கள் அடிமைகளா யிருக்கவேண்டும். அல்லது அவர்கள் தங்கள் உயிர்களைவிட்டுக் கைகளைக் கழுகிவிடவேண்டும்" என்று வரைந்திருக்கிறார்.

எனதன்பார்ந்த ஆரிய சகோதரர்களே! பார்த்தீர்களா நுங்கள் ஆரிய மதத்தின் மேன்மையை! இத்தகைய (குப்பைத் தொட்டிற்கும் அருகதையற்ற) ஓர் நூலைவைத்துக் கொண்டுதானு உலகத்திலுள்ள எல்லா மதங்களையும் தூற்ற ஆரம்பித்து விட்டீர்கள்! நுமது அந்தரங்கங்கள் யாவும் பகிரங்கமாகும் காலம் வந்து விட்டது. இனி உங்கள் (முன்னுக்குப் பின்முறணுன விஷயங்கள் நிண்றந்த) அ—' வேதங்களில் யாதொரு பிரயோஜனமுமில்லை. நுமது ஆரியமதஸ்தாபகரான ரிஷி தயானந்தருக்கேனும் ஈடேற்றங் கிடைத்திருக்கிறதா வென்று நுங்கள் பகுத்தறிவைக் கொண்டு தீர்மானியுங்கள். 1350-வருடங்

களாக ஓர் அக்ஷரமேனும் மாறுபடாததும், உலகத்துக்கெல்லாம் பொதுவான மதமாகிய எமது பரிசுத்த இஸ்லாம் மதத்தில் மாத்திரமே, இனிஇல்லா ஈடேற்றமும், முடிவில்லா முக்தியுமுண்டு. இதோ எமது குர்ஆன் ஷரீப் கூறுவதாவது:—

"விசுவாசிகள் (முஸ்லிம்கள்) முக்தி யடைந்து விட்டார்கள். அவர்கள் (முஸ்லிம்கள்) தங்கள் தொழுகையில் தாழ்மையோடிருப்பார்கள். வீணான விஷயங்களை விட்டு விலகியிருப்பார்கள். ஏழை வரியைக் கொடுப்பார்கள். தங்கள் அபங்களைக் (கெடுதியை விட்டும்) காத்துக் கொள்ளுவார்கள். தங்கள் மனைவிகளுடன், அல்லது தங்களுக்கு (ஷரீஅத்தின்படி-இஸ்லாம் மார்க்கப்படி) உடைய தாக்கிக் கொண்டவர்களைத் தவிர, இதரர்களிடம் நட்புக் கொள்ளக் கூடியவர்களன்று. இதற்கப்புறம் போக நாடுகிறவர்கள் வரம்பைக் கடந்தவர்களாவார்கள். அவர்கள் பாதுகாத்து வைக்கும்படி கொடுக்கப்பட்ட பொருள்களையும், உடன்படிக்கைகளையும் பேணுவார்கள். தங்கள் தொழுகையை எப்பொழுதும் பேணிக் கொள்ளுவார்கள். இவர்கள்தான் அனந்தரக்காரர்களாக விருக்கும். இவர்கள் அனந்தரங்கொண்டு சுவனலோகத்தில் எப்பொழுதும் இருப்பார்கள்." அல் குர்ஆன் (அத்தியாயம் 23:1-11).

இன்ஷா அல்லாஹ் அடுத்த சஞ்சிகையில் இஸ்லாம் மதமே (உலகில்) உண்மை மதம் என்ற விஷயமாய் வரையப்படும்.

ஹஜ்ஜும், முஸ்லிம் மன்னர்களும்.

(மக்கமா நகரிலிருக்கும் ஒருமாணவர் எழுதியது.)

"ஹஜ்ஜு" இஸ்லாமின் ஒரு முக்கியமான கடமையாகும். இயல்புள்ளோர் ஹஜ்ஜை நிறைவேற்றித்தாகை வேண்டும். சுல்தான்கள், அமீர்கள் ஆகியவர்களைக் காட்டிலும் ஹஜ்ஜை நிறைவேற்றுதற்குரிய அந்தஸ்தை வேறு எவரும் பெற்றிருக்க வில்லையென்பது வெளிப்படை. ஆகவே. அதிமுக்கியமான இக்கடமையை முஸ்லிம் மன்னர்கள் நிறைவேற்றாது ஒதுங்கியிருக்கமுடியாது. ஆனால், எண்ணிறந்த முஸ்லிம் மன்னர்களுள் சிலர் மட்டுமே ஹஜ்ஜு செய்யும் பாக்கியத்தைப் பெற்றதற்காக வருந்த வேண்டுமெல்லவா? ஆக்ஷி சம்பந்தமான

வேலை, அல்லது அலக்ஷியம் ஆகியவைகளை முன்னிட்டு பெரும்பான்மை யினரான முஸ்லிம் மன்னர்கள் ஹஜ்ஜை நிறைவேற்றாது பெரும் இழிவுக்கு ஆளாகிவிட்டனர்.

“ஹஜ்ஜு” என்னும் இஸ்லாமிய கடமையை நிறைவேற்றிய உத்தமரான முஸ்லிம் மன்னர்களின் ஹஜ்ஜைச் சார்ந்த வரலாற்றை இவ்வியாசத்தில் அதிபிரயாசையோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. அல்லாமா மக்ரேஜீ அவர்கள், நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் முதல், தங்கள் காலம்வரை ஹஜ்ஜை நிறைவேற்றிய 26 முஸ்லிம் மன்னர்களின் ஹஜ்ஜு வரலாற்றை சேகரித்து ஒரு கிரந்தத்தை வரைந்திருக்கிறார்கள். அக்கிரந்தம் எமக்குக் கிட்டாததற்காக வருந்துகிறேன். அக்கிரந்தம் எனக்குக் கிடைத்திருக்குமாயின், இவ்வியாசம் இன்னமும் சிரேஷ்டமாக விருக்குமென்பதில்லை யில்லை. ஆனால், எனக்கு இவ்வமயம் கிடைத்துள்ளவைகளை மட்டும் ஆதாரமாக வைத்துகொண்டு சிலரின் ஹஜ்ஜு வரலாற்றை வரைகின்றேன்.

நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பரிசுத்தமான ஹஜ்ஜைச்சார்ந்த செய்தியானது, மற்ற மன்னர்களின் ஹஜ்ஜுச் செய்திகளோடு சேர்த்து வரையப்படுவது உசிதமல்லவென்பதை யான் அறிவேன். ஆனால், முதலாவதாக நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் “ஹஜ்ஜத்துல் விதாயி”ன் வரலாற்றை சுருக்கமாக எழுதுவது நன்மைப் பயக்கத் தக்கதென்றும், அவசியமென்றும் தெரிகின்றது.

ஹஜ்ஜே நபவி

நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஹிஜ்ரத்துக்குமுன் நிறைவேற்றிய ஹஜ்ஜுகளின் வரலாற்றையும், எண்ணிக்கையையும் தெரிந்து கொள்ளக்கூடவில்லை. ஹிஜ்ரத்துக்குப் பின்னர் ஒரு ஹஜ்ஜை நிறைவேற்றி யிருப்பதையெல்லோரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். இந்த ஹஜ்ஜு “ஹஜ்ஜத்துல் விதாஃ” என்ற நாமத்தைக் கொண்டதாகும். ஏனெனின், இந்த ஹஜ்ஜின்போது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், தங்களின் உம்மத்தோர்களிடம் இறுதியான விடையைக் கோரும் வார்த்தைகளை மொழிந்தார்கள். இந்த “ஹஜ்ஜத்துல் விதாஃ” ஹிஜ்ரீ 10-வது ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஹஜ்ஜுக்குப் போகக் கருதியிருந்த செய்தி துல்கஃதா மாதத்தில் விளம்பரஞ் செய்

யப்பட்டது. நாயகம் அவர்களோடு சென்று ஹஜ்ஜு செய்யவேண்டு மென்னும் ஆவல் மேலிட்டு, அரேபியா முழுவதும் திரண்டுவந்தது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் துல்கஃதா மீ 26உ ஸ்னானஞ் செய்து, ஆடைதரித்து, லுஹர் தொழுகையைத் தொழுதுவிட்டு மதீனமா நகரிலிருந்து புறப்பட்டார்கள்.

முதலாவதாக நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் "துல்ஹுலீபா" என்னுமிடத்தில் தங்கினார்கள். நாய கமவர்களோடு அவர்களின் பரிசுத்தமான எல்லா மனைவிகளுமிருந் தார்கள். இரவு முழுவதும் துல்ஹுலீபாவி லிருந்தார்கள். மறுநாள் நாயகமவர்கள் ஸ்னானஞ்செய்து, பரிமளம்பூசி, லுஹர் தொழுகை யைத் தொழுதுவிட்டு "கிரானு"டைய இஹ்ராமைக் கட்டி, சப் தத்தை யுயர்த்தி "லப்பைக்" என்று கூறி அவ்வாறே சப் தத்தை யுயர்த்தி "லப்பைக்" என்று கூறும்படி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களுக் கறிவித் தார்கள். பின்ன ஸஹாபாக்களுள் சிலர் [1]. கிரானுடையவும், சிலர் [2]. "தமத்தஉ" வுடையவும், சிலர் [3]. 'அப்ராது'டையவும் இஹ்ராமைக் கட்டிக் கொண்டார்கள். பின்னர் நாயகம் ஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லம் அவர்கள் "கஸ்வா" என்னும் வாகனத்திலேறிச் சென்றார்கள். வாகனம் நின்று விட்டபோழ்தும், நாயகம் முஹம் மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் முன்போலவே சப்தத்தை யுயர்த்தி "லப்பைக்" என்று கூறுவார்கள். வழியில் அனேகமாயும் முக்கியமாய் குன்றுகளில் ஏறும்போழ்தும், பள்ளங் களில் இறங்கும்போழ்தும் (தல்பியா) லப்பைக் என்று கூறிக் கொண்டே வழிச்சென்றார்கள். இப்பரிசுத்த வகுப்பு செல்லச் செல்ல ஜனங்கள் கூட்டங்கூட்டமாய் வந்து இவ்வகுப்போடு சேர்ந்து கொள்வது பெரும் காக்ஷியாக விருந்தது. "கண்ணுக்கெட்டிய வரை மானிடக்காடாகவே தெரிந்தது" என்று ஹஜ்ரத் ஜாபிர் ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் கூறியிருக்கிறார்கள். துல்ஹஜ்ஜு மீ 4உ நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மக் கமா நகரையடைந்தார்கள். நாயகம் அவர்கள் "தீதவா" என்னும்

1. "கிரான்" என்பது ஒரு இஹ்ராமைக் கொண்டு ஹஜ்ஜையும், உமரா வையும் நிறைவேற்றுவதற்குச் சொல்லப்படும்.

2. "தமத்தஉ" என்பது ஒரே பிரயாணத்தில் இரண்டு இஹ்ராமைக் கொண்டு ஹஜ்ஜையும், உமராவையும் நிறைவேற்றுவதற்குச் சொல்லப்படும்.

3. "அப்ராத்" என்பது ஒரு இஹ்ராமைக்கொண்டு உமராவின்றி ஹஜ் ஜை மட்டும் நிறைவேற்றுவதற்குச் சொல்லப்படும்.

கிணற்றுக்குச் சமீபத்தில் அன்றிரவு தங்கி, காலையில் அக்கிணற்றில் ஸ்னானஞ்செய்து விட்டு "ஜூஹூன்" என்னும் வழியே நகருக்குட் சென்று, ஹரம் ஷரீபுக்கு விஜயஞ்செய்தார்கள்.

ஹரம் ஷரீபுக்குச் சென்று "தவாபுல் குதூமை' (அஃதாவது:- மக்கமா நகரிலிருப்பவர்களைத்தவிர மற்றோர் மக்கமா நகரையடைந்து செய்யவேண்டிய சுன்னத்தான தவாபு)ச் செய்தார்கள். பின்னர் மகாமே இப்ராஹீமுக்குப்பின் புறமாக இரண்டு "ரகஅத்" தொழுதுவிட்டுப் பின்னர் "ஹஜர அஸ்வதை' முத்தியிட்டதும், "ஸபா"வுக்குச் சென்று "ஸயீ" செய்தார்கள். பிறகு நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "அப்தஹ்" என்னுமிடத்தில் இறங்கி 8உ வரை அவ்விடத்திலேயே தங்கியிருந்தார்கள். 8உ எல்லா ஸஹபாக்களையும் அழைத்துக்கொண்டு "மினா" போய்ச் சேர்ந்தார்கள். மினாவிலேயே லுஹர், அஸர், மஃரிப், இஷா ஆகிய நான்கு தொழுகைகளைத் தொழுதார்கள். 9உ சூரியோதயமானதும் "மினா' விலிருந்து "அரபா" வைநோக்கிப் பிரயாணமானார்கள். அரபாவையடைந்து "வாதியே அர்னா"வில் கம்பளிக் கூடாரமடித்து, அதில் தங்கினார்கள். தலைப்பொழுது சாய்ந்தபின் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "நாகா" என்னும் பெண் ஒட்டகத்திலேறி, இதுபோழ்து "நம்ரா" என்னும் மஸ்ஜித் இருக்குமிடம் சென்று அவ்விடத்தில் நாகாவிலிருந்து கொண்டே சொற்சுவையும், அதி உணர்ச்சியுமுள்ள ஒரு குத்பாவையோதினார்கள். அதில் அறிவுறுத்தக் கூடிய உபதேசங்களும், அரிய எச்சரிக்கைகளும் "ஷரயின்" கட்டளைகளும் அடங்கியிருந்தன.

நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் குத்பாவின் இறுதியில் லக்ஷத்துக் கதிகமாகவிருந்த ஜனங்களை நோக்கி "கூலிகொடுக்கும் நாளையில் என்னைப்பற்றி கேள்க்கப்படும்போது நீங்கள் கூறவிருக்கும் விடையாது?" என்று வினவியதும் "தாங்கள் எல்லா கட்டளைகளையும் எங்களுக்குச் சமர்ப்பித்துவிட்டீர்கள், தங்களின் கடமையை நிறைவேற்றிவிட்டீர்கள். தங்கமின்னது, பித்தளையின்னதென்று தனித்தனியே பிரித்துக்காட்டி விட்டீர்கள், என்று சாக்ஷிபகருவோம்" எனக் கூவினார்கள். பிறகு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வானத்தின்பக்கம் தங்களின் விரலையுயர்த்தி "யாஅல்லாஹ! நீ சாக்ஷியாகவிருக்கவேண்டும்" என்று மும்முறை கூறினார்கள். பிறகு நாயகம் அவர்கள் ஜனங்களைநோக்கி "இவ்விடம் சமுகங்கொடுத்திருப்போர் இங்கு விஜயஞ் செய்யாதோர்க்கு இவ் விஷயத்தை யறிவித்துவிடவேண்டும்" என்று பகர்ந்தார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் குத்பா ஓதி முடிந்ததும் "இன்று நான் உங்களுக்கு உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கி விட்டேன். நேர்வழிக்குரிய பாக்கியத்தைப் பூர்த்தி செய்துவிட்டேன். உங்களுக்கு இஸ்லாம் மார்க்கத்தை குறிப்பிட்டு, அதை அழகாக்கினேன்" என்னும் வியாக்கியானத்தைச் சார்ந்த ஆயத்து இறங்கிற்று.

"குத்பா" ஓதிமுடிந்த பின்னர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ளுஹர், அஸர் ஆகிய தொழுகைகளை "ஜமஃ" ஆகவும் கஸராகவும் தொழுவித்தார்கள். பிறகு நாயகம் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் "நாகா" விலேறி "ஜபலே ரஹ்மது"க்குச் சமீபமாகச்சென்று, ஸகுராத்துக்குப் பக்கத்தில் நின்று கொண்டு "நான் இங்கே நின்றுகொண்டிருக்கிறேன். ஆனால், அரபாவின் திறந்தவெளி முழுதும் ஹாஜிகள் தரிபடும் மூவக்கிபாகும்" என்று கூறிவிட்டு, கிப்லாப்புறத்தை நோக்கி துஆ ஓதுவதற்காக கைகளை யுயர்த்தினார்கள். சூரியன் அடையும்வரை அல்லாஹுத ஆலாவின் தியானத்திலும், அவனிடத்தில் விஞ்ஞானஞ் செய்வதிலும் ஈடு பட்டிருந்தார்கள். இதன் மத்தியில் அனேகர் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சமுகத்தில் ஹஜ்ஜின் சட்டதிட்டங்களை வினவிக்கொண்டிருந்ததால், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவரவருக்கு வேண்டுவனவற்றை விளக்கிக் கொண்டிருந்தார்கள். சூரியன் அடைந்த பின்னர், நாயகம் அவர்கள் ஜனங்களை "முஸ்தலிபாவுக்குச் செல்லும்படியாயும், சிறு நடையாய்ச் செல்லவேண்டு மென்றும், வாகனங்களைத் துரிதமாய் விரட்டிச் செல்வதில் நன்மை யெதுவுங் கிடையாதென்றும் அறிவித்தார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வழியில் ஓரிடத்திலிறங்கி "தவறாரத்" செய்துவிட்டு தங்களிடமிருந்த "ஜம் ஜம்" என்னும் ஜலத்தால் "ஒலூ" செய்துகொண்டு, வாகனத்திலேறி "முஸ்தலிபா"வை யடைந்து, மீண்டும் "ஒலூ" செய்து "மஃரிப்," இஷா" ஆகிய இரண்டையும் "ஜமஃ" செய்து கஸராகத் தொழுவித்தார்கள். முஸ்தலிபாவிலேயே இரவைக்கழித்தார்கள். "ஸுப்ஹ்" தொழுகைக்குப் பின்னர் "நாகா"விலேறி "கிப்லா"வின் திசையை நோக்கி அல்லாஹுத ஆலாவை தியானித்துக்கொண்டும், அவனுடைய சமுகத்தில் விஞ்ஞாபனஞ் செய்துகொண்டு மிருந்தார்கள். நல்ல வெளிச்சமேற்பட்ட பிறகு மினாவை நோக்கிப் புறப்பட்டார்கள். வழியில் ஏழு பொடிக்கற்களைப் பொறுக்கித் தரச்சொல்லி, அவற்றை வாங்

கிக்கொண்டார்கள். மினாபோய்ச் சேர்ந்து "ஜம்ரத்துல் உக்பா" வில் அவ்வேழு கற்களையும் எறிந்துவிட்டு, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்அவர்கள் தங்கியிருந்த இடத்திற்குவந்து, வாகனத்தி லிருந்து கொண்டே சொற்சுவையும், அதியுணர்ச்சியுமுள்ள ஒரு குத் பாவை (பிரசங்கத்தை) ஓதினார்கள். இக்குத்பாவின் இறுதியில் முஸ் லிம்களுக்கு பிரயாண விடையளித்தார்கள். பிறகு குர்பானீயின் களஞ்சென்று 100 ஒட்டகங்களை குர்பானீ செய்துவிட்டு, முடியிறக் கிக் கொண்டார்கள். ஸஹாக்களுக்கு தங்களின் பரிசுத்தமான முடியையளித்ததும், நாயகம் முகம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்கமா நகரையடைந்து "தவாபுல் இலாபா" வைச்செய்து, ஜம்ஜம் ஜலத்தையுமருந்திவிட்டு, மினாவுக்குத் திரும் பிச் சென்றார்கள். துல்ஹஜ்ஜுமீ 12உ வரை மினாவிலேயே தங்கியி ருந்தார்கள். ஒவ்வொரு நாளும் கல்லெறிந்தார்கள். துல்ஹஜ்ஜு 11 அல்லது 12ல் மற்றொரு குத்பாவும் ஓதினார்கள். 13உ மத்தியானத் துக்குப் பின்னர் மினாவிலிருந்து பிரயாணமாகி, மக்கமா நகரை யடைந்து, "மஹஸப்" என்னுமிடத்தில் தங்கியிருந்தார்கள். கடைசீ இரவு "தவாபுல்விதாஃ" செய்துவிட்டு, 14உ மதீனாவுக்குப் புறப் பட்டார்கள். அநேகமாய் துல்ஹஜ்ஜுமீ 22உ "இஷ்ராக்" கின் நேரம் (காலை 7 மணிக்கு) மதீனமா நகரையடைந்தார்கள். "அல்லா ஹும்ம ஸல்லி அலாமுஹம்மதின் வஅலா ஆலி முஹம்மத்"

குலபாயே ராஷிதீன்களின் ஹஜ்ஜு

ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கிலாபத்துப் பதவியை ஏற்றுக்கொண்ட ஹிஜ்ரீ 11வது ஆண்டில் ஹஜ்ஜுக்குப்போகக்கூடவில்லை. ஆதலின் ஹஜ்ரத் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்களை "அமீருல் ஹஜ்ஜாக" நியமித்து, மக்கமா நக ருக்கு அனுப்பினார்கள். கிலாபத்தின் இரண்டாவது வருடம், அஃதா வது ஹிஜ்ரீ 12-வது ஆண்டில் ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லா ஹு அன்ஹு அவர்கள் மக்கமா நகரையடைந்து "ஹஜ்ஜு" "உம்ரா, ஆகிய கடமைகளை நிறைவேற்றினார்கள்.

ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கிலாபத்துப் பதவியையேற்றுக் கொண்ட முதல்வருடம் ஹஜ்ஜுக்கு வரமுடியாத தால், ஹஜ்ரத் அப்துர் ரஹமானிப்னு ஔப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அமீருல் ஹஜ்ஜாக நியமித்தனுப்பினார்கள். இதன் பின் ஒவ் வொரு வருடமும் தாங்களே அமீருல் ஹஜ்ஜாக நியமனமாகி மக்கமா நகருக்கு விஜயஞ்செய்து கொண்டிருந்தார்கள். மேலும், ஹஜ்ரத்

உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரீ 17-வது ஆண்டு ரமலான் மாதம் உம்ரா செய்வதற்காக, மக்கமா நகருக்கு வந்திருந்தார்கள். இவ்வருகைக்குக் காரணமாவது:—மக்கமா நகருக்கு பெரும் வெள்ளம் வந்து, அவ்வெள்ளம் "மகாமே இப்ராஹீமை" முஸ்பலா என்னுமிடம்வரையடித்துக் கொண்டுபோய்விட்டது. மக்கா இரசிகள் மகாமெ இப்ராஹீமை எடுத்து கஃபாவுக்குக்கொண்டுவந்து, ஹஜ்ரத் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கறிவித்தார்கள். இதையறிந்த ஹஜ்ரத் உமர் அவர்கள் திடுக்கிட்டு, உடனே ரமலான் மாதத்தில் "உம்ரா"வின் இஹ்ராமைக்கட்டிக்கொண்டு, மக்கமாநகருக்கு வந்து மகாமெ இப்ராஹீம் இருந்தவிடமின்னதென்று நிச்சயித்து, அதை இதுபோழ்திருக்குமிடத்தில் அமைத்ததுந் தவிர, மக்காவின் மேல்புறம் முஅல்லிஎன்னுமிடத்தைச் சார்ந்தாப்போல் ஓர் அணையை போட்டார்கள். இதற்குப்பிறகு மக்கமாநகருக்கு வந்தவெள்ளம் வேறுதிசையை நோக்கி ஓடவாரம்பித்துவிட்டது.

ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹஜ்ஜு யாத்திரை சர்வசாதாரணமாகவிருந்தது. ஆனதுபற்றியே, ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஹஜ்ஜுயாத்திரையை யொட்டிய எல்லாகாரியங்களுக்கும் பத்து திரஹங்களே செலவாயின. ஹஜ்ஜு முடிந்தவுடன் எல்லா ஹாஜிகளும் தங்கள் தங்கள் ஊருக்குத் திரும்பிவிடவேண்டுமென்றும், பிரதேசத்தார் மக்கமா நகரில் தங்கியிருக்கக் கூடாதென்றும், ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பொதுவாகவே கட்டளையிடுவார்கள்.

ஹஜ்ரத் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரீ 23-வது ஆண்டு கிலாபத்துப் பதவியை வகித்து 12 வருடங்கள் கலீபாவாகவிருந்தார்கள். இப்பன்னிரண்டு ஆண்டுகளில் முதலாவது வருடம், கடைசிவருடம் ஆகிய இரண்டு வருடங்களைத்தவிர, மற்ற பத்து வருடங்களிலும், ஹஜ்ரத் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாங்களேமக்கமாநகருக்கு நேரில் விஜயஞ்செய்து ஹஜ்ஜை நிறைவேற்றி வந்தார்கள்.

ஹஜ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்ஹிஜ்ரீ 36-வது ஆண்டில் கிலாபத்துப் பதவியை வகித்து ஐந்து வருடங்கள்வரை கலீபாவாகவிருந்தார்கள். ஆனால், காரிஜிய்யாக் களோடு நடைபெற்ற ஜிஹாதின் காரணமாக அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹஜ்ஜு செய்யக்கூடவில்லை. ஆதலின், ஹிஜ்ரீ 36, 37-வது வருடங்களில் ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும், ஹிஜ்ரீ 38-வது வருடத்தில் இப்னு அப்பாஸ்

ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சகோதரரையும், ஹிஜ்ரீ 39-வது வருடம் ஷைபத் இப்னு உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும், ஹஜ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ''அமீருல் ஹஜ்ஜு'' களாக நியமனஞ்செய்து மக்காவுக்கனுப்பினார்கள். ஹிஜ்ரீ 40-வது வருடம் ஹஜ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷஹீதாகிவிட்டார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் காலத்தில் ஹஜ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இரண்டு ஹஜ்ஜுகளை நிறைவேற்றியிருக்கிறார்கள். அவ்விரண்டு ஹஜ்ஜிலொன்று ஹிஜ்ரீ 9-வது வருடத்தில் நடைபெற்றதும், இஸ்லாமின் முதலாவது ஹஜ்ஜு என்று கீர்த்திவாய்ந்ததுமாகும். மற்றொன்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களோடுசென்று ஹிஜ்ரீ 10-வது ஆண்டில் நிறைவேற்றிய ஹஜ்ஜாகும். ஹிஜ்ரீ 10-வது வருடத்திற்குப்பின்னரும் ஹஜ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அநேக ஹஜ்ஜுகளைச் செய்திருக்கின்றார்கள்.

ஹஜ்ரத் மஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குலபாயெ ராஷிதீன்களுக்குப்பிறகு கலீபாவாக அமர்ந்தார்கள். இவர்கள் தங்களின் கிலாபத்துக் காலத்தில் இரண்டு ஹஜ்ஜு (ஹிஜ்ரீ 44-வது வருடத்தில் ஒரு ஹஜ்ஜும், ஹிஜ்ரீ 50-வது வருடத்தில் ஒரு ஹஜ்ஜும்) செய்திருக்கின்றார்கள். மஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரீ 44 வது வருடம் ஹஜ்ஜு செய்ய மக்கமாநகருக்கு வந்திருந்தபோழ்து, ''அபூ ரஹீமுல் அப்தரீ''யிடமிருந்து தாருந் நத்வாவை ஒரு லக்ஷம் திரஹத்துக்கு வாங்கி வக்குபு (மானியஞ்) செய்தார்கள். இது இஸ்லாம் பிரகாசிப்பதற்குமுன் குரைஷிகள் ஆட்சிபுரியும் ஸ்தலமாகவிருந்தது. ஆனால் மஆவியா, ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் இது வகபு செய்யப்பட்ட பின்னர், மக்கமாநகரில்அமீர்கள் வசிக்கவும், ஹஜ்ஜு செய்வதற்காகவரும் கலீபாக்கள் தங்கியிருப்பதற்கும் இது சௌகர்யமாக விருந்துவந்தது.

ஹஜ்ரத் மஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ''ஹரமைனை''ச் சார்ந்தோர்க்கும், ஸஹாபாக்களுக்கும் பெருந் தொகைகளை இனமளித்தார்கள். ஹரம் ஷரீபின் வெளிச்சத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். ''குத்பா'' என்னும் பிரசங்கத்தைப் புரிவதற்காக ஒரு மிம்பரைச் செய்து ஹரமில் வைத்தார்கள். அதற்குமுன் ஹரமில் மிம்பர் வைக்கப்பட்டதில்லை. மக்கமா நகரில் போதிய தண்ணீரின்றி, அதிகக் கஷ்டமாகவிருந்தது. ஆதலின், மஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கால்வாய்களைத் தயா

ரித்து அக்கஷ்டத்தை யகற்றினார்கள். மக்கமா நகரில் ஜலவசதிக்காக கால்வாய்வெட்டியது இதுவே முதற்தடவையாகும். இதற்கு முன் கிணற்று ஜலத்தைக்கொண்டு மட்டுமே காலங்கழிந்தது.

அக்கால்வாய்கள் வெகு காலம்வரை நிலைத்திருந்தன. பின்னர் பழுதாகிவிட்டனவாயினும், அல்லாமா அஜ்ரகீயின் காலம்வரை அக்கால் வாய்களின் சின்னங்களிருந்தன. முதலாவது ஹஜ்ஜின் போழ்து ஹஜ்ரத் மஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மக்கமா நகரின் தலைவர் இரண்டாயிரம் தும்பை ஆடுகளை விருந்திடும் பாவனையிலளித்தார்கள்.

அப்துல் மலிக்இப்னு மர்வான் பனீ உமையாவைச்சார்ந்த அப்துல் மலிக் இப்னு மர்வான் அவர்கள் ஹிஜ்ரீ 57-வது வருடத்தில் ஹஜ்ஜு செய்தார்கள். ஹரமின் எல்லையைக்குறிப்பிட்டுக் காட்டுவதற்கான அடையாளங்கள் சீர்குலைந்திருந்தனவாதலின், அவைகளை அப்துல் மலிக்இப்னு மர்வான் அவர்கள் சீர்திருத்திப் புதிப்பித்தார்கள். அநியாயஞ்செய்வதில் பெயர்பெற்று, ஹிஜாஸின் கவர்னராகவுமிருந்த ஹஜ்ஜா ஜிப்னு யூஸுபை அப்துல் மலிக்இப்னு மர்வான் அப்பதவியினின்று தள்ளிவிட்டார்.

வலீதிபனு அப்துல் மலிக் பனீயுமையாவைச் சார்ந்த வலீதிப்னு அப்துல் மலிக் என்னும் கலீபா அவர்கள் ஹிஜ்ரீ 95-வது வருடத்தில் ஹஜ்ஜு செய்தார்கள். இந்த கலீபாவின் ஹஜ்ஜை யொட்டி குறிப்தடத்தக்க செய்தியெதுவும் வரையப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. (தொடரும்.)

ஜும்ஆ குத்பாவின் தர்ஜுமா.

ஏ! நன்னம்பிக்கை யுடைவர் (மூமின்)களே! ஜும்ஆ (வெள்ளி) தினத்தன்று தொழுகைக்காக (நீங்கள்) அழைக்கப்பட்டீர்களேல், அல்லாவை ஞாபகமூட்டுவேதளவில் விரைந்து செல்லுங்கள்; மேலும், உங்கள் வியாபாரங்களை விட்டுவிடுங்கள்; நீங்கள் அறிவுடையவர்களாக விருந்தால் அதுவே சிலாக்கியமானது. (என அறிந்து கொள்வீர்கள்) குர்ஆன் அத்:63, அம்: 9:

கனமிக்க உலமாக்களே! கனவான்களே!! சகோதரர்களே!!! யான் இன்று ஓர் மஹா முக்கியமான விஷயத்தைப்பற்றி எழுதத்

துணிந்த காரணத்தால் எம்மை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகி றேன். நமது இந்தியாமட்டுமல்லாமல் ஏனைய தேசத்து உலமாக்க ளெல்லாம் இவ்விஷயத்தைப்பற்றி பற்பல அபிப்பிராயங்களைக் கூறி யிருக்கின்றார்களாயினும், பெரும்பான்மை உலமாக்களின் அபிப்பிரா யங்களுக்கு மாற்றமான சிறுபான்மை உலமாக்களின் அபிப்பிராயத் தைத் தழுவி, சிறியேன் இக்கட்டுரையை வரையப் புகுந்ததைப்பற்றி கண்ணியமிக்க உலமாக்கள் எம்மீது சீற்றங்கொள்ளாதிருப் பார்க ளென்றே நம்புகின்றேன். சிறுபான்மையோரின் அபிப்ராயமே ஒருகாலத்தில் பெரும்பான்மையோரின் அங்கீகாரத்தைப்பெற்று, அனுஷ்டானத்திலும் வந்து விடுவதை உலாமாக்கள் நிராகரிக்க முடி யாது. ஆகவே, இப்போது நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றி ஆராயப் புகுவோம்.

சிறப்புற்றோங்கும் உலமாக்களே! இப்போது நமது தமிழ்நாட்டி லுள்ள பற்பல முஸ்லிம் பட்டினங்களிலும், குக்கிராமங்களிலும் ஜும்ஆ தினத்தன்று பள்ளிவாயல்களில் ஓதப்பட்டுவரும் குத்பாவைப் பற்றி பற்பல கிளர்ச்சிகள் கிளம்பியிருக்கின்றன. சில விடங்களில் ஜும்ஆவின் குத்பாதர்ஜுமாச் செய்யப்பட வேண்டுமென்றும், சில விடங்களில் தர்ஜுமாச் செய்யலாகாதென்றும் கூறிவருகின்றார்கள். இப்பிரச்சனையில் உலமாக்கள் மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கூறி, பொது ஜனங்களுக்கிடையே ஆலிம்கள்பேரில் அவநம்பிக்கையை யுண்டாக்கி விடுவது மட்டுமல்லாமல், அவர்களின் ஹிருதயங்களைச் சின்னபின்னப்படுத்தி விடுகின்றார்கள். ஒருவர் குத்பாவை தர்ஜு மாச்செய்ய வேண்டுமெனக் கூறினால், மற்றொரு ஆலிம் கூடாதெனக் கச்சையை வரிந்து கட்டிக்கொள்கின்றார். இந்நிலைமையில் பொது மக்கள் பாபம்! என்செய்வர்!! இவ்விருவரில் எவரின் அபிப்பிராயத் தைத் தழுவி நடப்பர்!!! இப்படிப்பட்ட மௌலானுக்களால் ஆயிரக் கணக்கான பட்டணம், கிராமங்கள் பல கட்சிகளாகச் சிதருண்டு கிடக்கின்றன. பலபள்ளிகள் நாசமடைந்து கிடக்கின்றன. உலமாக் கள் ஒற்றுமைப்பட்டு எந்த விஷயங்களையும் முடிவு செய்து கொண் டார்களாகில், பொது ஜனங்கள் ஒரே வழியிற் செல்ல அதிக இலே சாகக்காண்பர். ஆகவே, இப்பொழுது ஜும்ஆ குத்பாவை தர்ஜு மாச் செய்யலாமா? கூடாதா? வென்ற பிரச்சனையிலும், உலமாக்கள் போட்டி போட்டுக்கொண்டு பொது ஜனங்களின் வெறுப்பைத் தேடிக் கொள்கின்றனர். இருதரப்பாரின் அபிப்பிராயங்களையும் அலசிப் பார்த்து, சரியான தீர்ப்புச் செய்வது உலமாக்களின் முக்கிய கடமை யாகும். இது சமயம் நந்தென்னாட்டு உலமாசபை இப்படிப்பட்ட

முக்கிய விஷயங்களிற் தலையிடாது, ஒதுங்கி நின்று விட்டதைப்பற்றி நாம் வியப்படைய வேண்டியதில்லை. ஏன்? உலமாக்கள் சபையாக விருந்தது இப்போது உலக மக்கள் சபையாகத் துலங்குகின்றது. அலிகார்சுாலேஜ் போன்ற ஓர் நாஸ்திகக் காலேஜை உற்பத்தி செய்யப் பெரிதும் ஈடுபட்டுழைத்து வருகின்றதுபோலும்! ஆனால், "உலமாசபை" என்ற பெயரை இன்னும் விடாது கட்டிவைத்திருப்பதைப் பற்றி ஆச்சரியப்படுகின்றோம். ஆகையால், தமிழ் நாட்டு உலமாக்கள் ஜும்ஆ குத்பாதர்ஜுமா வைப்பற்றி அதிக கவனம் செலுத்துவார்களென்று நம்புகின்றேன்.

குத்பாவை மொழிபெயர்த்து, அல்லது அரபியல்லாத இதர பாஷையில் ஓதுவது கூடாதென மறுக்கும் உலமாக்களாற் கூறப்படும் முக்கிய காரணங்களாவன:—"1. நபி (சல்) அவர்கள் அரபிப்பாஷையிலேயே ஓதினர். 2. நபி(சல்) அவர்களுக்குப் பின்னல் அவர்களின் அத்தியந்த சஹாக்களும், குலபாயே ராஷிதீன்களும், அரபுதேசமல்லாத பற்பல பாஷைகளையுடைய தேசங்களைக் கைப்பற்றிய பின்பும், அவ்விடங்களில் குத்பாவை அரபியல்லாத பாஷையில் நடத்தினர்கள் என்பதற்கு ஆதாரமொன்றும் நமக் கெட்டவில்லை.

3. குலபாயேராஷிதீன்களுக்குப் பின்னும் இமாம்கள், முஜ்தஹது (இஸ்லாமதச் சட்டநிருபணர்) கள் காலங்களிலும் அரபியல்லாத பாஷையில் குத்பா நடைபெறவில்லை. 4. தொழுகையில் கிராஅத்து ஓதுவது போல், குத்பாவும் அரபிப் பாஷையிலேயே நடைபெற வேண்டும். 5. "குத்பா ஓதப்படுகின்றது" என்று ஜனங்கள் தெரிந்து கொண்டால் அதுவே போதுமானது; குத்பாவில் என்ன விஷயங்கள் ஓதப்பட்டனவென அறியவேண்டிய அவசியமில்லை, என்பவை போன்ற இன்னும் பல காரணங்களைக் கூறுகின்றனர். ஆனல், தர்ஜுமா செய்வதால் குற்றமில்லையென்றே, அல்லது அவசியம் செய்யவேண்டுமென்றே வாதிக்கும் உலமாக்கள்கூறும் சமாதானமாவன:- 1. நபி(சல்) அவர்களும், குலபாயேராஷிதீன்களும், இமாம்களும் அரபியல்லாத பாஷைகளில் ஓதாமலிருந்ததற்காக நாமும் அவ்வாறே நடக்கவேண்டிய பொறுப்பில்லை. ஏனெனின், அவர்கள் காலத்தில் மார்க்க பக்தியால் அரபிப்பாஷையைப் அதி சீக்கிரம் கற்றுக்கொடுக்கிற வழக்கம் அக்காலத்திய ஜனங்களிடமிருந்தபடியால் பெரும்பாலும் அரபி தெரிந்தவர்களே குத்பாவைக் கேள்க்கக்கூடியவர்கள். ஆகையால், அரபியல்லாத பாஷையில் ஓத அவசியம ஏற்படவில்லை. இக்காலத்திய ஜனங்களிலவ்வாறில்லை, அரபித் தெரிந்தவர்கள் மிக மிகச் சொற்பத் தொகையினர். பெரும்பாலோர்க்குத் தெரியும் பாஷை

யில் ஓதுவதுதான் அவசியம். 2. இமாம் அபூஹனீபா(ரஹ்) அவர்கள் தொழுகையினும் அரபியல்லாதபாஷையில் கிராஅத்தை ஓதலாமெனக் கூறுகின்றார்கள். அன்னாரின் சிஷ்யர்களிற் பெயர்பெற்ற நிபுணர்களான, அபூயூஸுப், முகம்மது (ரஹ்) அவர்களிருவரும் அரபிபாஷையில் சக்தியற்றவன் மற்ற பாஷையில் ஓதலாமென நிபந்தனையொன்றைச்சேர்த்தார்கள். ஆகவே, தொழுகையில் கிராஅத் அரபியல்லாத பாஷையில் ஓதலாமென கூறியிருக்கும்போது, குத்பாவை ஏனைய பாஷையில் ஓதக் கூடாதென்பது சரியல்ல. 3. குத்பா என்ற பதமே 'உபதேசம்' என்ற பொருளைத்தாங்கி நிற்பதால், பொதுமக்கள் அறிந்து கொள்ள முடியாத ஓர்பாஷையில் உபதேசம் புரிவதென்பது புத்திக்கும், யுக்திக்கும் ஏற்றுக்கொள்ளாதவிஷயமாகும்எனமுதலியமுகாந்தரங்களை எண்பித்துக் காட்டுகின்றார்கள். இவ்விரு அபிப்பிராயங்களைப்பற்றி உலமாக்கள் கவனம் சரியாக செலுத்தி சரியான முடிவொன்றை கூறுவதற்குமுன், அடிபேனின் அபிப்பிராயத்தை வெளியிடக் கடமைப் பட்டவனாக விருக்கின்றேன். மதராஸில் காதியானிப் பத்திரிகை யொன்று தர்ஜுமா செய்வது அவசியம் என எவ்வளவு வலியுறுத்திக் கூறியபோதும், அப்பத்திரிகையின் கூற்றுகளை யான் லக்ஷியஞ் செய்யவில்லை. அப்பத்திரிகைதன் அபிப்பிராயத்தை மட்டும் ஒழுங்காக வெளியிடவில்லை. உலமாக்களைத்தூற்றவே அவ்விஷயத்தைத் தனக்கொரு ஆயுதமாகப் பாவித்துக் கொண்டது. இப்பால் சின்னாட்களுக்குப்பின் ஸைபுல்இஸ்லாம் பத்திரிகையும், காதியானிப் பத்திரிகைக்கு மாற்றமான அபிப்பிராயத்தை வெளியிட்டது மாத்திரமல்லாமல், தனக்குச்சாதகமான, பல உலமாக்களின் பத்வாக்களையும் ஒன்றன்பின்னொன்றாக பிரசுரித்த காலத்தும் எம்மனம் பாதிக்கப் படவில்லை. பெரும்பான்மையைக் கவனிக்கவேண்டிய அவசியமில்லையாயினும், இருதரபிலும் தக்க நிபுணத்துவம் பெற்ற உலமாக்கள் வாதித்து வந்த படியால் எக்கட்சியையும் சாராமல் தன்னந் தனியே சின்னாட்கள் வரை பொருமையுடன் சிந்தித்து வந்தேன். மஹா வல்லமையும், பஹோன்னத ஞானமும் நிறைந்த அல்லாஹுதஆலா எம் மனத்தை திடீரெனத் திருப்பிவிட்டான். யான் மாணவனாக விருந்த காலத்தில் பலவிடங்களில் யானே குத்பாவை தர்ஜுமாச் செய்துவந்தேன்; ஆனால் மௌலானாஅப்துல்ஹை சாஹிபு லக்னௌவியவர்களின் தீர்ப்பைப் பார்த்த பின்பு, முன்னால் யான் செய்து கொண்டிருந்த தர்ஜுமாவை நிறுத்திக்கொண்டேன். அதற்கப்புறம், பெங்களூர் மௌலானாஅப்துல்ஹைசாஹிபவர்களின் பத்வா எமது பார்வைக்கெட்டியது. அன்னார் அரபியல்லாத பாஷையில் ஓதுவது அவசியமெனக்

கூறியது மட்டுமல்லாமல், உர்துக்கவியில் பல குத்பாக்களைத் தயார் செய்து வெளியிட்டுமிருக்கின்றார். இவ்விரு மௌலானாக்களின் பத்வாக்களையும், தேவ்பந்து உலமாக்களால் கொடுக்கப்பட்ட பத்வாக்களையும் நோட்டமிட்டபின், மாணவ பருவத்தில் ஆராய்ச்சியில்லாது எழுந்த அபிப்பிராயம் பல நூதன ஆராய்ச்சியுடன்ஊர்ஜிதமாக்கப்பட்டது. அப்படியே இப்போதும் தர்ஜுமாவும் செய்ய எத்தனித்து விட்டேன்.

கனம் தங்கிய நபி(சல்) அவர்கள் அரபியல்லாத பாஷையில் ஓதாமற் போனதும் ஓர் ஆதாரமாகக் கருதுகின்றதைப்பற்றி எனக்குப் பெரும் ஆச்சரிய முண்டாகின்றது. நபி பெருமானாரவர்கள் செய்த காரியங்களையெல்லாம் மார்க்கச்சட்டமாகக் கொள்ளவும் செய்யாத காரியங்களெல்லாம் கூடாதெனத் தள்ளவும் முடியாதென, நமது மா பெருந் தலைவர்களாகிய இமாம்கள், புக்கஹாக்கள் கூறி இருக்கின்றார்களே! நபிகடிலகம் (சல்) அவர்கள் செய்தவைகளிற் பல இபாதத் (வணக்கத்)தின் தோரணையிற் செய்யப்பட்டவை ; சில காரியங்கள் ஆதத்தி (வழமையி)ன் தோரணையிற் செய்து வந்திருக்கிறார்கள். குத்பாவே இவ்விரண்டிற்கும் உதாரணமாக விளங்குகின்றது. குத்பா, உபந்நியாசம் என்ற தோரணையில் வணக்கமாகும். இதேகுத்பாஅரபிப் பாஷையென்ற ஹோதாவில் வழமையாகும். குத்பா உபதேசம் என்பதற்குப் பல காரணங்களிருக்கின்றன. நபி(சல்) அவர்கள் ஒவ்வொரு நிகழ்ச்சியை முன்னிட்டே குத்பாவை ஓதியிருக்கின்றார்கள். அவர்கள் ஓதிய பல குத்பாக்களை நோட்டமிட்டவர்களுக்கு நன்கு புலனாகும். சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி குத்பா ஓதியிருப்பதின் தாத்பரியம் உபதேசம் என்பது தெற்றென விளங்கும். ஆனால், அரபியிலேயே அவர்கள் ஓதிவந்திருப்பது வழமையை யனுசரித்து அவ்வாறு ஓதினார்கள். ஏன்? அரபியல்லாத பாஷை யவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். அல்லது ஹிஜாஜிலுள்ள ஜனங்களுக்கு அரபி யல்லாத பாஷை தெரியாத காரணத்தால் அரபிப்பாஷையில் ஓதியிருக்கலாம். எப்படியும் நபி (சல்) அவர்கள் அரபியிலோதியது தங்கள் வழமையை யனுசரித்தே யல்லாது அப்பாஷையும் ஓர் இபாதத் (வணக்கத்) திற் சேர்ந்ததென்பதற்காகவல்லவென்பதை தெரிந்து கொண்டால், "குத்பா அரபியில் ஓதுவது சுன்னத்; சுன்னத்துக்கு மாற்றமாக இதரபாஷையில் ஓதுவது மக்ரூஹ்" என்ற அபவாதம் ஒழிந்துபோகும். பெருமானாரவர்களின் வழக்கத்தை யனுசரித்து நடந்துவருவது முஸ்தஹப்பு (நல்லது அதாவது அதை நிறைவேற்றுவதால் நன்மை; விட்டுவிடுவதால் குற்றமில்லை) என்ற தீர்ப்புக்குக்கட்

டாயம் வந்தேதீரவேண்டும். ஆனால், தர்ஜுமா "மக்ரூஹு தஹ்ரீம்" எனக்கூறும் உலமாக்கள் அரபி பாஷையில் ஓதுவதை "சுன்னத்து முவக்கதா" வெனக்கூறுகின்றார்கள். இவ்வாறு கூறுவதற்கு சரியான முகாந்திரம் காண்பிக்கின்றார்களில்லை. நபி (சல்) அவர்கள் அரபியில் ஓதினார்கள் என்ற ஒரு காரணத்தைத்தவிர,வேறுகாரணம் யாதொன்றையும் காண்பிக்கவில்லை. அரபியில் குத்பா ஓதவேண்டுமென்று பெருமானாரவர்கள் சொன்னதாக நாளதுவரை எந்த உலமாக்களும் எண்பிக்கவில்லை. ஆகவே, நபிகளுயகம் (சல்) அவர்கள் அனுஷ்டித்து வந்த எல்லா வழக்கங்களும் நமக்கு மார்க்க விதியாகமாட்டாது என்றும், இபாதத்து (வணக்கம்) என்ற தோரணையில் அவர்கள் நடத்தி யிருந்தால் மட்டுமே நமது மார்க்க விதியெனக் கொள்ளப் படுமென புக்கஹாக்கள் கூறியிருக்கின்றார்கள். அரபிப்பாஷையில் குத்பா ஓதிவந்தது அன்னாரின் ஆதத்தே (வழமையே) யன்றி, இபாதத்து (வணக்கம்) அல்லவென நாம் முன்னால்விளக்கிவிட்டோம்.

இனி நபி பெருமானார் (சல்) அவர்களுக்குப் பின் வந்த குலபாயே ராஷிதீன்களாகிய, அபூபக்கர், உமர், உதுமான், அலி (ரலி) அவர்களும் அரப் அல்லாத பல தேசங்களைக் கைபற்றியபின்பும், அரபியல்லாத பாஷைகளிற் தேர்ச்சி பெற்றிருந்த பல ஸஹாபாக்களிருந்தும், ஏன் அத்தேச பாஷையில் குத்பா ஓதும்படி நியமிக்கவில்லையென்றும், அரபியல்லாத பாஷையில் குத்பா ஓதக்கூடாது என்ற காரணத்தை முன்னிட்டே அவ்வாறு செய்யாமல், நபி பெருமானாரவர்கள் நடத்திவந்தபடியே இந்நான்கு கலீபாக்களும் நடத்திவந்தார்களென்றும் விவாதிக்கின்றனரே எனநீங்கள் நம்மைக்கேட்கலாம்.இவற்றிற்குப் பல பதில்களிருக்கலாம். முதல் கலீபாவாகிய ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கிலாபத்தின் காலத்தில் அரபியல்லாத பாஷையையுடைய தேசங்களொன்றும் கைப்பற்றப்படவில்லை. அவர்களின் மூன்று வருடத்திற்குக் குறைந்தகாலம் இஸ்லாம் மதம் விட்டுநீங்கிய முர்தத்துகளுடனும், நபி யெனப்பறையறைந்த முஸைலமத்துல் கத்தாபுடனும் போர்புரிந்து, அவர்களையடக்கவுமே சரியாகவிருந்தது. ஷாம் (சிரியா) தேசத்தில் சிலபாகங்களும், இராக்கு மெசபட்டோமியா தேசத்தில் சில பாகங்களும் ஜயிக்கப்பட்டதாயினும், அத்தேசங்களிலுள்ளவர்களின் பாஷை அரபியாகவே இருந்துவந்தபடியால், அத்தேசங்களில் அவர்கள் கிலாபத்துக் காலத்தில் அரபியல்லாத பாஷையில் நடத்தவில்லையென்பதற்கு நாம்ஒன்றும்முகாந்தரம் காண்பிக்கவேண்டியதில்லை. நபி (சல்) அவர்கள் அரபியல்லாத பாஷையில் ஓதவில்லையென்பதற்குக் கூறியபதிலே இதற்கும் போதுமானது.

ஆனால், மற்ற மூன்று கலீபாக்கள் காலங்களிலும் வன்இதரபாஷைகளில் நடத்தாமல்விட்டார்கள் என்ற கேள்வியொன்றுபாக்கியாக விருக்கின்றது. ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் காலத்திலும், உஸ்மான் (ரலி) அவர்கள் காலத்திலும் பார்ஸி (பெர்ஷியா) தேசமும், ஈஜிப்டு (மிஸர்) தேசமும் இஸ்லாம் அரசாங்கத்தில் சேர்க்கப்பட்டதாகக் கூறிய போதிலும், அத்தேசஜனங்கள் முழுமையும் இஸ்லாம் மதத்தை அப்போதே தழுவினார்களா? அல்லது நாளாவட்டத்தில் இஸ்லாம் மதத்தில் நுழைந்தார்களா வென்பதை நாம் கவனித்தல் அவசிய மாகும். இத்தேசங்கள் முஸ்லிம்கள் கொடியின் கீழ் வந்தவன்றே இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தார்கள் என்று, எந்த சரித்திராசிரியர் களும் கூறவில்லை. அத்தேசங்கள் முறையே பார்ஸிப் பாஷை, கிப்திப் பாஷை பேசும் ஜனங்களைக் கொண்டதாக விருந்தன. முஸ் லிம்கள் அத்தேசங்களைக் கைப்பற்றிய பின், அவ்விடங்களில் பல மஸ்ஜிதுகளை யமைத்து ஜும்ஆ குத்பாக்களை அரபிப்பாஷையில் ஓதிவந்தார்கள். என்றாலும், குத்பாக்களைக் கேட்டுக் கொண் டிருந்த முஸ்லிம்களிற் பெரும்பான்மையோர்கள் அரபிக ளென்பதில் எவரும் சந்தேகிக்க வேண்டியதில்லை. ஆனால், கொஞ்சகாலத்திற் கிப்புறம் அத்தேசஜனசங்களெல்லோரும் இஸ்லாம் மதத்தைத்தழுவி விட்டார்கள். இவர்கள் எல்லோரும் அல்லது பெருமான்மையோர் அரபிப் பாஷையை வெகு சீக்கிரம்கற்றுக் கொண்டார்கள் என்பதற்கு எண்ணிறந்த காரணங்களிருக்கின்றன. ஈஜிப்ட் தேசமும், அதைச் சார்ந்த அல்ஜீரியா, தூனீஸ், மோரோக்கோ, முதலிய வட ஆப்பிரிக்கா தேசங்கள் முஸ்லிம்கள் கொடியின் கீழ் வந்த கொஞ்சநா ளைக்குள், தங்கள் சுயபாஷையாக அரபிப்பாஷையைத் தெரிந்துகொண் டார்கள். இன்றைக்கும் கீழ் ஆப்பிரிக்கா தேசமுஸ்லிம்கள் முழுமை யும் அரபிப்பாஷை பேசுபவர்கள் என்பதை எவராலும் மறுக்கமுடி யாத உண்மையாகும். அக்காலத்திய முஸ்லிம்கள் இஸ்லாம் மதப்பி ரசாரத்திற்குத்தக்க கருவி அரபிப்பாஷைதான்எனக் கண்டதால், எத் தேசம் சென்றாலும் அத்தேசவாசிகளுக்கு வெகு சீக்கிரத்தில் அர பிப் பாஷையைக் கற்றுக் கொடுத்து விடுவார்கள்; இதற்கு இஸ்லாம் அரசாங்கமும் ஆதரவளித்து வந்தது. ஜனங்களும் இவ்வரபிப்பா ஷையை ராஜாங்கபாஷையாகவும், வேதபாஷையாகவும் மதித்து வெகு சீக்கிரமாகவும், அக்கரையாகவும் கற்றுக்கொள்கிற வர்களாகவுமிருந்தி ருக்கிறார்கள். ஆனால், கீழ் நாடாகிய பெர்ஷியா தேசம் மட்டும் பழய பார்ஸிப் பாஷையை விடாமல் இப்போதும் அப்பாஷை வழங்கப்படு கின்ற தெனக் கூறினும், அத்தேசத்திலும் அரபிப்பாஷையை

வெகு ஆவலுடன் படித்து,இஸ்லாம் மார்க்கத்தை நன்றாக ஆராய்ச்சி செய்திருக்கின்றார்கள்.குர்ஆன் ஷரீபையும், நாயகத்திருமொழிகளையும் நன்றாக ஆராய்ச்சி செய்யவேண்டுமானால்,அரபிப்பாஷையைக் கற்றுக் கொள்ளாமல் முடியவே முடியாதென்பது அறிஞர்களின் அபிப்பிராயம். குர்ஆன் வேத வியாக்கியானிகளும், ஹதீஸ் ஷரீபை, பல கிரந்தங்களில் சரியான ஆதாரங்களுடன் ஒன்றாகத்திரட்டிய, இமாம்களான புகாரி, முஸ்லிம், திருமதி, அபூதாவுத், பைஹக்கீ, நஸயீ போன்ற முஹத்திஸீன்களும், இமாம் கஸ்ஸாலி, இமாம் ராஸி போன்ற தத்துவ சாஸ்திரிகளும்,இமாமுல் அஃலம் போன்ற மார்க்க நிபுணர்களும், மேலும் கணிதம்,ரஸாயன சாஸ்திரம்,வானசாஸ்திரம் பூமிசாஸ்திரம் முதலிய கலைஞானங்களை அரபிப்பாஷையில் திரட்டிய மாபெருந்தலைவர்களெல்லாம் அப்பார்ஸி தேசத்திலுள்ளவர்களே! அப்படியிருக்க அரபிப்பாஷையை அத்தேசவாசிகள் கற்றுக்கொள்ளவில்லை யெனக்கூறுவது எங்கனம்பொருந்தும்? ஆகவே,இப்பேர்ஷிய தேசத்திலும் அரபியல்லாத பாஷையில் குத்பாவை நடத்திவைக்க அவசியம் ஏற்படவில்லையென்பதுதெளிவாகத்தெரிந்துபோய்விட்டது. அவசியம் ஏற்படாமலிருக்கும் போது, வழமையான ஒரு துறையை விட்டுவிட்டு, வழமையில்லாத மற்றோர் துறையிலிறங்க வேண்டிய அவசியமில்லை யென்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விஷயம்.

ஆகையால், நபி (சல்) அவர்களும் மற்ற குலபாயே ராஷிதீன்களும், இதர ஸஹாபாக்களும் அரபியல்லாத பாஷையில் ஓதவில்லை என்பது அவர்கள் அனுசரித்து வந்த வழமையை மாற்றக்கூடிய அவசரமொன்றும் ஏற்படவில்லை யென்பது இதனால் விளங்கக்கிடைக்கின்றது. இதுவுமன்றி,அக்காலத்திய கலீபாக்கள் அரபி முஸ்லிம்களாகவிருந்தபடியால் தங்கள் அரசாங்க பாஷையாகிய அரபிப்பாஷையிலேயே கோர்ட்டு விசாரணை முதல், எல்லா நடவடிக்கைகளையும் அரபிப் பாஷையில் நடத்திவந்திருக்கிறார்கள். அஃதேபோல்குத்பாவையும், தங்கள் ராஜாங்கபாஷையில் ஜனங்கள் பற்றுவைத்துக் கற்றுக் கொள்ளட்டும் என்ற நன்னோக்கத்தின் பேரில், அரபிப்பாஷையில் நடத்திவந் திருக்கலாம். அக்காலத்திய உலமாக்களும் பொது மக்கள் அரபிப்பாஷையை ஆவலுடன் கற்றுவருவதைத் தெரிந்து இவ்வழமையை நீக்காமல், அனுமதித்து வந்திருக்கலாம். இப்படியல்லாமல் அரபியல்லாத பாஷையில் குத்பா ஓதுவது குற்றமெனத்தெரிந்து,அங்ஙனம் ஓதாது விட்டார்களெனக் கூறுவதற்கு எவ்வித ஆதாரமும் கூறுவது பொருந்தாது. அப்படித் தெரிந்திருந்தால் ஏன் "குத்பா

அரபியல்லாத பாஷையில் ஓதக்கூடாது" என்று எவரும் கூறாது போந்தனர்?

கண்ணியம் வாய்ந்த மார்க்க மேதாவிகளே! நபி (சல்) அவர்கள் முதல், குலபாயே ராஷிதீன்களும் மற்ற கலீபாக்களும், ஓதிவந்த குத்பாக்களை நாம் உற்று நோக்குவோமாயின், குத்பாவின்நோக்கமே பொது ஜனங்களுக்கு உபதேசம் புரிதல்தான் என்றும், அரபிபாஷை முக்கிய நோக்கமல்ல வென்றும் தெரிந்துக் கொள்ளலாம். சமயத்திற்கு தகுந்தாப்போல் குத்பாவில் விஷயங்களையும், மார்க்க சட்டங்களையும் எடுத்துப் போதித்திருக்கிறார்கள்; தொழுகையில் கிராஅத்து குர்ஆனிலுள்ள ஏதோ சிலபாகத்தை ஓதுவதுபோல் குத்பாவில் ஓதுவதுகிடையாது. புதிது புதிதான விஷயங்களையே எடுத்துக்காண்பித்திருக்கிறார்கள். ஜனங்களுக்கு உபதேசம் புரியும்போது எவ்வாறுஜனங்களின் ஆத்ம வியாதியை யனுசரித்து குர்ஆன் ஹதீதுகளிலிருந்தும் பெரியோர்களின் நன்னடக்கைகளிலிருந்தும் விஷயங்களைப் பொறுக்கி உபந்நியாசம் செய்யப்படுகின்றதோ, அஃதோ போல் குத்பாக்களிலும் காண்கின்றோம். இதனாலும் குத்பாவின் இரகசியம் இன்னது தான் என நாம் நிர்ணயிக்க முடியாதா? அரபிப்பாஷையிற்றான் ஓத வேண்டுமென்றிருந்தால், நபி (சல்) அவர்களும், குலபாயே ராஷிதீன்களும் ஓதிய குத்பாக்களைத் தவிரவேறுகுத்பாக்களை ஓதுவதுசாத்தியமாகுமா? சுன்னத் என்பது நபி (சல்) அவர்களும், குலபாயே ராஷிதீன்களும் செய்து வந்த காரியத்தை நிறைவேற்றுவது மட்டுமேயல்லாமல், இப்னு நபாத்தா, அப்துல்ஹை மௌலானாமுதலிய சாதாரண உலமாக்கள் தங்கள் சொந்த நடையில் எழுதிவைத்த அரபி குத்பாக்களை, நாம் எவ்வாறு சுன்னத் எனக் கொள்ள முடியும்? சிலவற்றையெடுத்தும், சிலவற்றை விடுத்தும்நடப்பதுதான்சுன்னத்தோவெனக் கேட்கின்றோம். இதுவரை எந்த உலமாக்களும் இப்னு நபாத்தா, மஜ்மூஉல் குத்பா போன்ற குத்பாக்களை ஓதுவது கூடாது எனக் கூறவேயில்லை. அரபியல்லாத பாஷையில் குத்பா ஓதக்கூடாதெனக் கூறிய மௌலானா அப்துல்ஹை சாஹிபவர்களும் குத்பா வொன்றைத் தயார்செய்து போயிருக்கிறார்கள். இப்படியே பல உலமாக்களும் பல குத்பாக்களை தன் சொந்த நடையில் தயார்செய்துவிட்டு, தர்ஜுமாமட்டும் "மக்ரூஹ்" எனக்கூறி இருக்கின்றார்கள். குத்பாவின் கருத்தை யுணர முடியாமல் அரபி வாக்கியங்களை மட்டும் இனிய தொனியில் கேட்கக் கேட்க ஆனந்த நித்திரையில் ஆழ்ந்து, சங்கீதம் பாடுகின்றவர்களின் தலையாடுவதுபோல் குத்பாவை கேட்பவர்களின் தலைகளும் ஆட்டங்கொடுத்துவிடுகின்றன. இதுதான் குத்பாவின்

தாத்பரியம்போலும்! கரகோஷம்போல் குறட்டையிட்டுத் தூங்கிய மஹான்களெல்லாம், குத்பா முடிந்தபின்பு தொழுகைக்கு இகாமத் கூறியவுடன் தடபுடலாக எழுந்து அப்படியே தக்பீர் கட்டிக்கொள்கின்றனர். இவர்களின் தொழுகை எவ்வாறு நிறைவேறுமென்பது தான் தெரியவில்லை.

மேலும் குத்பா, பிரசங்க தோரணையிலமையப் பெற்றதனாலேயே தொழுகைக்கு முன் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஏனெனின்? வாரத்திற்கொரு முறையாவது ஜனங்கள் உபதேசம் கட்டாயம் பெற வேண்டுமென்றும், அப்பிரசங்கத்தில் ஜனங்கள் நிசப்தமாகவிருந்து எழுந்து போகாமல் கவனமாகக்கேட்க வேண்டுமென்பதற்காகவுமே, தொழுகைக்குமுன் குத்பா ஓதப்படுகின்றது. தொழுகையை முன்னால் நிறைவேற்றிவிட்டால் குத்பாவை கேட்காமல் சிலர் எழுந்து போகவும் கூடுமென்பதை, ஜும்ஆ தினத்தன்று பிரசங்கம் செய்து கொண்டிருக்கும்போது ஜனங்கள் எழுந்து போய்க்கொண்டிருப்பதைப் பார்க்கும் நமக்குத் தெரியாததல்ல. வெள்ளியன்று நான்கு ரக்அத்துள்ள லுஹர்த் தொழுகையை, இரண்டு ரக்அத்தாகக் குறைக்கப்பட்டிருப்பதின் இரகசியத்தையும் உலமாக்கள் சிந்திக்கவேண்டும். இறைவனால் கொடுக்கப்பட்ட பெரும் பாக்கியத்தை, விளங்கமுடியாத பாஷையில் அலங்காரமாக குத்பாவை படித்துவிட்டு பாழ்படுத்துவது நியாயமாகுமா? நமக்கு ஆண்டவன் அளித்த நேரத்தை பொருத்தமான வழியில் செலவிடாது, சம்ரதாயத்திற்காக வீண்வழியிற் சில வழிக்கலாகுமா? குத்பாவில் உபதேசம் நிறைந்திருக்கின்றதென்பதை மட்டும் ஞாபகமூட்டுவதே குத்பாவின் தாத்பரியமென வாதிப்போர், நாம் ஆரம்பத்தில் கூறியிருக்கும் குர்ஆன் அம்சத்தை கவனிக்கவில்லைபோலும். "இறைவனை ஞாபகமூட்டுவதளவில் விரைந்து செல்லுங்கள்" என்று குர்ஆன் அறைகின்றதே! உபதேசமின்னதென விளங்கினாலன்றோ இறைவனை ஞாபகம் செய்யமுடியும். தற்காலத்தில் பள்ளிகளிலும், மற்றபாகங்களிலும் செய்யப்படும் பிரசங்கங்களின் கருத்தென்னை? இறைவனை ஞாபகஞ்செய்து, அவனையஞ்சி வணங்குதற்காகவன்றோ! அப்படியிருக்க ஆண்டவன் கட்டளையும் குத்பாவைக் கேட்கவே சீக்கிரம் போங்களென்றும் கூறுகின்றது. அந்த குத்பாவே அல்லாவை ஞாபகமூட்டும் உபதேசங்களைப் பொதிந்திருக்கிறது. அவ்வுபதேசங்களை பொதுமக்கள் விளங்கும்படியன்றோ? மொழிதல்வேண்டும். தொழுகைதான் அல்லாவை ஞாபகமூட்டுகின்றதெனக்கூறின், அப்படியானால் ஜும்ஆவன்று தொழுகும் இரண்டு ரக்காஅத்தைப் பார்க்கிலும் ஏனைய நாட்களில் தொழுகும் நான்கு

ரக்கஅத்துத் தொழுகையே சிறந்ததெனலாம். வெள்ளியன்று தொழு கும் தொழுகைக்கு மட்டும் இவ்வளவு மதிப்பு எங்கிருந்துவந்தது என்ற கேள்வியும் பிறக்கின்றதல்லவா? ஆகவே, குத்பாவைக் கேட்பதற்காகவே நீங்கள் சீக்கிறம் போங்களெனக் கூறியிருக்கின்றனென்பது, தெற்றென விளங்கிப்போய்விட்டது.

இனி குத்பா என்ற பதத்திற்கு என்ன அர்த்தமெனக் கவனித்தாலும் "பிரசங்கம்" "உபதேசம்" என்ற அர்த்தமேமிளிர்ந்து நிற்கின்றன. இப்படி அகராதி அர்த்தத்தாலும், அனுஷ்டான முறைகளாலும், குத்பாவென்பது ஓர் உன்னதமான பிரசங்கமேயன்றி, வெறும் அரபிப் பாஷையில் இனிய தொனியில் படிக்கும் ஓர் மூடிமந்திரமல்ல வென்பதை நாம் நன்குகத் தெரிந்துகொண்டோம். மேலும் இமாமுல் அஃலம், அபூஹனீபா, அபூயூஸுப் (ரஹ்) போன்ற மஹான்கள் சிற்சில விதிகளின்படி தொழுகையையும் அரபியல்லாத பாஷையில் நிறைவேற்றலாமெனக் கூறியிருக்கும்போது, குத்பாவைமட்டும் ஏன் அவ்வாறு நடத்தக்கூடாதென்பதை, நமக்கு விளக்கிக்காண்பிக்காது போயிருக்கின்றுர்கள். இப்போதும் தர்ஜுமா கூடாது என வாதிக்கும் உலமாக்களாவது இதை விளக்கிக் காண்பிப்பார்களா? வெனக் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

தாருபஹறன் நகரில் வாழும், ஹக்கீமுல்உம்மத்தாகிய, ஜனுப் மௌலானு அஷ்ரப்அலி சாஹிபவர்களும் குத்பா தர்ஜுமாச்செய்வது "மக்ரூஹ்" எனக்கூறியதாக நமது ஸைபுல் இஸ்லாம் ஒரு பத்வாவை வெளியிட்டிருந்தது. ஆனுல், அன்னுர், தங்களால் திரட்டப்பட்ட "இம்தாதுல்பத்வா" வென்னும் மார்க்கத்தீர்ப்புப் புத்தகத்தில் "குத்பா ஓதும்போதும் தீங்கைக்கண்டால் விலக்க, நமது மார்க்கம் இடமளித்திருக்கும்போது, சிற்சில சமயங்களில் (சந்தர்ப்பம் போல்) தர்ஜுமா செய்வதால் குற்றமொன்றுமில்லை" யென வரைந்திருக்கிருர்கள். அவ்வாக்கியத்தையும் நாம் கவனிக்கவேண்டும்.

அன்புமிக்க உலமாக்களே! யான் இச்சிற்றுரையை எமது சிற்றறிவிற் கெட்டியமட்டும், ஓர் அபிப்பிராயமாக விடுத்தேனேயன்றி, இதையொரு தீர்மானமாகக்கொண்டு எழுதவில்லை யென்பதை உங்கள்பால் எடுத்துக் காண்பிக்கின்றேன். என் சிற்றறிவில் தர்ஜுமா செய்வது அவசியமெனப்பட்ட படியால், எவருடைய் தாக்ஷண்யத்தையும் நினையாது வெளியிடத்துணிந்தேன். நமது மார்க்கமும் அவ்வாறே வற்புறுத்துகின்றது. கண்ணியமிக்க உலாமாக்கள் எமது இவ்வபிப்பிராயம் சரியோ? அன்றித்தப்போ வென்பதை சரியான முறையில் எடுத்துக் காண்பிப்பார்களாகில், யான்மிகவும் நன்றிபாராட்டு

வேன். இத்துடன் எமது சிற்றுரையை நிறுத்திக்கொண்டு; உலமாக்களிடம் விடைபெற்று கொள்ளுகிறேன். வஸ்ஸலாம்.

குறிப்பு குத்பா தர்ஜமா:— நந்தென்னுட்டில் தற்போது ஜும்ஆ, ஈது (பெருநாள்)களில் வழமையாக ஓதப்படும் குத்பாக்களை அரபியல்லாத பாஷைகளில் ஓதலாமா? கூடாதா? வென்ற விவாதம் பலவூர்களில் தோன்றியிருக்கின்றபடியால், எம்மால் பல காரணங்களுடன் இதரபாஷைகளில் குத்பா ஓதுவதால் யாதொரு குற்றமும் நிகழாதென எழுதிய வியாசமொன்று மேலே குறிப்பிட்டிருப்பதை தமிழ்நாட்டு மௌல்விகள் ஆழ்ந்து யோசித்து, அவ்வியாசத்திலுள்ள சாதகபாதகங்களை யொழுங்கான முறையில் எடுத்துக் காண்பிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். முற்காலத்திய உலமாக்கள், இமாமத்து, அதான், குர்ஆன் ஓதிக்கொடுத்தல் முதலிய வேலைகளுக்காக சம்பளமோ, சன்மானமோ வாங்குவது ஹராம் (தகாதது) எனக் கூறியிருந்தும் பிற்கால உலமாக்கள் அவ்வேலைகளுக்காக சம்பளம், சன்மானம் வாங்குவதால் குற்றமில்லையெனக் கூறியதுமல்ல, எல்லா தேசங்களிலும் அமுலில் நடந்தும் வருகின்றன. குத்பா தர்ஜமாவைப்பற்றி பிற்காலத்திய உலமாக்களிற் சிலரே பிடிவாதம் செய்து வருகின்றனர் என்பதையும் மறக்கலாகாது.

இப்படிக்குத் தங்கள் சகோதர ஊழியன்,

ந. கா. ந. முஹம்மது பாக்கவி,

தாஜின் ஆசிரியர்.

இங்கிலாந்தில் இஸ்லாமிய பிரசாரம்

அஹ்மதியாக்கள்தான் இங்கிலாந்தில் இஸ்லாமிய பிரசாரத்தை ஆரம்பித்து, அதை காஜா கமாலுத்தீன் நடத்தி வருவதாக, தாருல் இஸ்லாம் ஆசிரியர் ஜனுப் பா. தாவுத்ஷா சாஹிப் முதலிய சிலர் கூறி வருகின்றனர். ஆதலின், நம்மவர் உண்மையைத் தெரிந்துகொள்ளுவதற்குரிய ஒரு செய்தியை, இதனடியில் குறிப்பிடுகிறோம்.

"இங்கிலாந்தில் இஸ்லாமிய பிரசாரத்தை ஆரம்பித்த கௌரவம் யாரைச்சாரும்?" என்ற தலைப்பின்கீழ் "டாக்டர் காலித் ஷெல்ட்ரேக்" என்னும் பெரியார் "ஆப்ரிக்கா முஸ்லிம் அவுட்லுக்"கில் எழுதியிருப்பதாவது :—

இங்கிலாந்தில் இஸ்லாமியப் பிரசாரத்தை யாரம்பித்த கீர்த்திக்குத் தாங்களே உரியவரென்று கூறிக் கொள்ளுவோர், அச்சேவையைப் புரியவேண்டுமென்று மனத்துள் நினைக்காத காலத்திலேயே

இங்கிலாந்தில் இஸ்லாமிய பிரசாரத்தைப் புரியவேண்டுமென்னும் நோக்கத்தோடு "இஸ்லாமிக் சோஸைட்டி" என்னும் நாமத்தைக் கொண்ட ஒரு சபை 1886-ல் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சபை நிரந்தரமான முறையைக்கொண்டிரா விடினும், இது மெச்சத்தக்கதாகவே நடைபெற்று வந்தது. ஆனால், 1903-ல் இச்சபையில் ஒரு பெரும் மாறுதலேற்பட்டது. கல்கத்தா வாசியாகிய டாக்டர் அப்துல்லாஹில் மாமூன் ஸஹ்ரவர்தீ அவர்கள் இங்கிலாந்தில் பாரிஸ்டர் கல்வி பயின்று கொண்டிருந்தார். இவர் இஸ்லாமிக் சொஸைட்டிக்கு "பைன் இஸ்லாமிக் சொஸைட்டி" என்னும் நாமத்தைச்சூட்டி, ஒரு புத்துயிரை யளித்தார். எகிப்து, பர்ஷியா, துருக்கி, இந்தியா முதலிய நாடுகளைச் சார்ந்த பலசமூகங்களின் தலைவர்கள் இச்சபை நடத்தி வைக்கும் கூட்டங்களில் கலந்து கொள்ள வாரம்பித்தனர். இங்கிலாந்தின் பெரிய ஹோட்டல்களில் ஈத் தொழுகை நிறைவேற்றப் பட்டு வந்தது. மௌலூது நபவியின் கொண்டாட்டத்திற்கு எல்லோரும் விஜயஞ் செய்து கொண்டிருந்தனர். "ஈத், ஜும்ஆ" ஆகிய தொழுகைகளுக்கு நூற்றுக்கதிகமானவர்கள் சேகரமாவார்கள்.

எகிப்து தேசத்தின் மாஜி கதீவாகிய அப்பாஸ் ஹில்மீ பாஷா இச்சபைக்கு 50 பவுன் நன்கொடையளித்தார். டாக்டர் ஸஹ்ரவர்தீ "லைட் ஆப் தி ஒர்ள்ட்" (Light of the world) என்னும் நாமத்தைக் கொண்ட ஒரு ஆங்கில மாதாந்தர சஞ்சிகையை நடத்திவந்தார். இது வுந்தவிற, இங்கிலீஷ், ஜர்மன், பிரான்ஸ் ஆகிய பாஷைகளில் "இஸ்லாம் ஸேர்ஜ்" என்னும் பெயரால் பற்பல வியாசங்களும் வெளியிடப்பட்டு வந்தன. கலீல் காலித்பே, ஜேகிராஸ் பீல்ட் முதலியோர் வியாசங்களைக் கொடுத்து வந்தனர். நான் சொஸைடியின் உதவிக் காரியதரிசியாயும், வியாசங்களை வரைபவனுயு மிருந்தேன். துருக்கி அரசாங்கத்தின் கௌன்சிலரும், எங்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளுவதுண்டு. ஸையித் அமீர் அலி, மிஸ்டர் தாமஸ், ஆர்னல்ட் முதலியோரும் எங்கள் கூட்டங்களுக்கு வந்து எங்களுக்கு கௌரவத்தை யளித்து வந்தனர். மேஜர்ஜனரல் ஜே. பீ.லீ, டக்கின்ஸன், மிஸ்லஸ் எல்ஹிப்னர் முதலிய ஆங்கிலேயர், டாக்டர் ஸஹ்ரவர்தீயின் காலத்தில் தான் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டார்கள்.

ஆனால், டாக்டர் ஸஹ்ரவர்தீ இந்தியாவுக்குப் பிரயாணமாகி விட்டதைக் குறிப்பிடும்போழ்து, வருத்தமுறும லிருக்கமுடியாது. அவருக்குப் பின்னர், ஹாபிஸ் மஹ்மூதுகான் ஷீரானீயின் பொறுப்பில் சங்கத்தின் காரியங்கள் நடைபெற்று வந்தன. ஷீரானி சாஹிப் அவர்கள் இவ்வமையம் லாஹூர் இஸ்லாமிய காலேஜின் ப்ரோபஸ

ராக விருந்து வருகிறார். நானும், ஷீரானி சாஹிபும் சேர்ந்து பல வருடங்கள் வரை சபையின் வேலையை அதிவுற்சாகத்தோடு நடத்தி வந்தோம். ஷீரானிசாஹிப் அவர்களின் முயற்சியால் சபையின் கௌரவம் நாட்டில் நன்கு நிலவிற்று ஷீரானீசாஹிப் காரியதரிசியாயும், நான் உபகாரிய தரிசியாயும் மிருந்து, டாக்டர் ஹெச். ஸ்டிப் என்பவரின் புத்தகத்தையும், வேறு சில சிறிய நூற்களையும் பிரசுரித்தோம். ஷீரானீசாஹிப் ஒரு நல்ல உயர்வான புத்தகச் சாலையை ஏற்படுத்தினார். சந்தேகமின்றி ஷீரானீசாஹிப் அதிகப் பிரயாசையோடு காரியங்களை நடத்திவந்தார். அவ்வமையம் "பைன் ஸ்லாமிஸத்" தைப்பற்றி ஆங்கிலப் பத்திரிகைகள் விரோதமான விபாசங்களை அடிக்கடி வெளியிட்டுக் கொண்டிருந்ததால், எங்கள் சபையின் மீது பலமான தப்பபிப்பிராயம் ஏற்பட்டது. ஆகவே, நாங்கள் சபையைக்கூட்டி "பைன்" என்னும் பதத்தை யகற்றி, "இஸ்லாமிக் சொஸைட்டி" என்று அழைத்து வந்தோம். இச்சபை முஸ்லிம் உலகத்திற்கு பொதுவானதாக விருந்ததால், பர்ஷியா, துருக்கி, இந்தியா எகிப்து ஆகிய தேசத்தவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருந்தனர்.

மிஸ் ஐலன்போப், ஹம்மர்புலாயிட் ஆகிய இருவரும் இங்கிலாந்திலுள்ள முஸ்லிம்களின் பிரதி நிதியாகவிருந்து அமெரிக்காவில் வேலை செய்து வந்தனர். திருப்போலியின்மீது இட்டாலியர் படையெடுத்ததை ஆக்ஷேபித்துக் கண்டனம் செய்வதன் பொருட்டு, ஒரு கூட்டத்தைக் கூட்டினோம். அக்கூட்டத்தில் மிஸ்டர் சார்லிஸ் ரோஸ் என்பவரும் பேசினார். திருப்போயிலில் இட்டாலியர் அரபியரைப் படுகொலை செய்ததைக் கண்டித்து, நாங்கள் புரிந்த வேலையை ஜனங்கள் விசேஷமாய் பாராட்டினர். பிறகு ஷீரானி சாஹிபும் இந்தியாவுக்குச் சென்று விட்டதால், சங்கத்தின் பொறுப்பை அப்துல் கனி சாஹிப் என்பவரிடத்து ஒப்புவிக்கபட்டது. இவரும் உத்தமமான முறையில் வேலையை நடத்திவந்தார்.

காஜா கமாலுத்தீனின் வருகை.

1912-வது வருடத்தில் காஜா கமாலுத்தீன் சாஹிப் இங்கிலாந்துக்கு வந்தார். அவர் வேலை செய்யும்பொருட்டு, இஸ்லாமிக்சொஸைட்டியின் பிளாட்பாரத்தை நாங்கள் கொடுத்தோம். அந்நாளில் கைருத்தீன் அபந்தியென்னும் துருக்கி தேசத்து இமாம் எங்களுக்கு இமாமாக விருந்து ஜும்ஆ, ஈத்தொழுகைகளைத் தொழுவைத்துக் கொண்டிருந்தார்கள். மௌலூதநபவியைக் கொண்டாடும் பொருட்டு இஸ்லாமிக்சொஸைட்டி ஏற்பாடு செய்தது. லார்ட் ஹெட்லி "இஸ்லாம்

மதத்தை தழுவிக் கொண்டதாக, 1914-வருடம் லண்டனிலுள்ள ஒரு ஹோட்டலில் காஜா கமாலுத்தீன் சாஹிப் விளம்பரஞ் செய்தார். (காஜா கமாலுத்தீன் சாஹிப் விளம்பரஞ் செய்தாரேயன்றி, லார்ட் ஹெட்லியை இஸ்லாம் மதத்தில் சேர்க்கவில்லை என்று இதன் மூலமாயும் விளங்கக் கிடக்கின்றது. ப.ர்)

பிறகு எங்கள் இஸ்லாமிக் சொஸைடியில் வேற்றுமையேற்பட்டு, இரண்டு வகுப்புகளாக பிரிந்துபோயின. (1886-ல் ஆரம்பமாகி 26-வருடங்கள் வரையில் வேற்றுமையின்றி, ஒற்றுமையாயும், ஊக்கமாயும் முஸ்லிம் சமூகத்திற்கு ஊழியஞ் செய்துவந்த "இஸ்லாமிக் சொஸைட்டி"யானது காஜா கமாலுத்தீன் சாஹிப் அச்சபையில் சம்பந்தப்பட்டு இரண்டு வருடத்திற்குள் பிளவுபட்டுப் போனதை குறிப்பிடாமலிருக்கமுடியுமா? அஹ்மதியாக்கள் தாங்கள் இஸ்லாம் மதப் பிரசாரம் செய்கிறவர்களென்று கூறிக்கொள்ளும் நிலைமையில், இவர்களால் முஸ்லிம்களுக்குள்ளேயே வேற்றுமையும், பிளவும் ஏற்படுவதேனோ? ப. ர்.)

திருநபியின் உபதேசங்கள்.

(1) எவன் ஹிர்தயத்துள் அணுப்பிரமாணமாவது ஈமான் உண்டுமோ? அவன் நரகத்தின் தீயைவிட்டுத் தப்பிக் கொள்ள முடியும். (2) அல்லாஹுதஆலாவை நேசிப்பவனை நேசியுங்கள்; அவனை வெறுப்பவனை நீங்களும் வெறுத்து விடுங்கள். (3) உங்களுக்காக எதைக் கோருகிறீர்களோ, அதையே மற்றவர்களுக்காகவும் அபேக்ஷியுங்கள். உங்களுக்கு விருப்பமில்லாதவற்றை மற்றவருக்கும் விரும்பாதீர்கள். (4) தன் சகோதரர்களின் முன்னேற்றம், க்ஷேமம் ஆகியவைகளை விரும்பாதவன் உண்மை மூமினல்லன். (5) அல்லாஹுதஆலாவுக்காக எதையும் அர்ப்பணம் செய்ய பின்னடையாமல், அவன் வழியிற்செலவு செய்கிறவனே அல்லாஹுதஆலாவை விசுவசிக்கும் பூர்ண ஈமானுடையவனாகும். (6) முஸ்லிம்களுக்குத் தீங்கிழைக்காத கை, நாவு ஆகியவைகளையுடையவனே உண்மை முஸ்லீமாவான். (7) பொது மக்களின் வாழ்க்கையும், ஜீவன்களும் எவனால் பாதுகாக்கப்படுமோ, அவன் சிறந்த

மூமினுவான். (8) அல்லாஹுத ஆலாவால் விலக்கப்பட்டிருப்பவைகளை விட்டு விரைந்தோடுபவனே, உண்மையில் பொறுமையுடையவனாகும். (9) மூமினாகவுள்ளவன் ஜினச் செய்யும்பொழுதும், கள்ளுண்ணும்போழ்தும் ஈமான் அவனைவிட்டும் விலகி நிற்கிறது. (10) மூமினாகவிருப்பவன் எக்காலத்தும் இலை உதிராததும், நிரந்தரமான செழித்த விருக்ஷத்தைப் போலிருப்பான். (11) அல்லாஹுத ஆலாவை வணங்குகிறவனும், அல்லாஹு தஆலாவைத்தவிர வணக்கத்திற்கு வேறு எவனுமில்லை என்று ஒப்புக்கொள்ளுகிறவனும், தன் நல்ல சொத்திலிருந்து அஞ்ஞதைகளுக்குக் கொடை கொடுப்பவனும் ஈமானின் இன்பத்தை யனுபவிப்பான். (12) மானிடவர்க்கத்தின்மீது தயைபுரியாதவனுக்கு அல்லாஹு தஆலா கிருபைசெய்யமாட்டான். (13) பெரியவர்களைக் கௌரவப்படுத்தாதவனும், சிறியவரிடத்து அன்புகொள்ளாதவனும், ஜனங்களுக்கு நற்காரியங்களை யேவி, அவர்களைக் கெடுதியில் நின்றும் அகற்றுதவனும் நம்மைச் சார்ந்தவனல்லன். (14) முஸ்லிம்களுக்கு அவசியமான வேளையில் ஆதரவளிப்பவனுக்கும், அல்லாஹு தஆலா கூலிகொடுக்கும் நாளையில் ஆதரவு புரிவான். (15) மானிடவர்க்கத்தை நேசிப்பவன் அல்லாஹு தஆலாவின் சமுகத்தில் விசேஷ நேசத்திற்குரியவனாகும். (16) அல்லாஹு தஆலாவின்சிருஷ்டிகளின்பேரில் அனுதாபமுடையவன்மீது, அல்லாஹு தஆலா அனுதாபமுடையவனாகிறன். ஆகவே, அல்லாஹு தஆலாவின் அனுக்கிரஹத்தை நீங்கள் விரும்புவீர்களாயின், அவனுடைய சிருஷ்டிகளிடத்து அனுதாபங்கொள்ளுவீர்களாக!

"அல்கலாம்."

பைண்டு கட்டிய முந்திய வால்யூம்கள். முழு அட்டவணையோடு, அழகிய கலிகோ பைண்டு கட்டியது.

1-வது வால்யூம் புத்தகம்	1-க்கு ரூ.	2—0—0
2-வது ,, ,,	,, ரூ.	4—0—0
3-வது ,, ,,	,, ரூ.	4—0—0

(தபாற் செலவு பிரத்தியேகம்)

"அல்கலாம்," சந்தா விபரம்.

உள் நாட்டிற்கு வருடசந்தா	ரூ.	3—0—0
வெளி ,, ,,	ரூ.	4—0—0
முறையே பொதுஸ்தாபனத்திற்கு		2—8—0, 3—8—0
மாணவருக்கு முறையே.	ரூ.	2—0—0, 3—0—0

மானேஜர் "அல்கலாம் ஆபீஸ்"
பண்டாரவாடை, தஞ்சை (ஜி)